விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 254 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 13 புதன்கிழமை (30.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## இனவாதம் மூலம் ஆட்சிக்கு வர முடியாது

ஜனாதிபதி ரணில் 03ஆம் பக்கம் பார்க்க

## அனைத்து வழிகளிலும் இலங்கைக்கு ஒத்துழைப்போம்

ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் 03ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் ஜனநாயக உரிமைகள் ரணில் அரசால் பறிக்கப்பட்டுள்ளது

### ஐ.நா பிரதிநிதியிடம் அநுரகுமார



(கொழும்பு)

மக்களின் ஜனநாயக உரிமைகள் ரணில் அரசினால் பறிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா பிரதிநிதியிடம் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிடப் பிரதிநிதி மார்க் என்ட்ரோ பிரெஞ், தேசிய 15

## இனவாதம், மதவாதம் பேசி

# தமிழ் எம்.பிக்களை சீண்ட வேண்டாம்

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வலியுறுத்து



(கொழும்பு)

இனவாதம், மதவாதம் பேசி வடக்குக் கிழக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சீண்டிப் பார்ப்பதை தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## சந்நிதியானுக்கு இன்று தேர்



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த 15

## கிளிநொச்சியில் வீதி விபத்து

### பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் அதிகாரியொருவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 15

## சண்டிலிப்பாயில் குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி கொள்ளை

### பணம், நகை, தொலைபேசி, மோ.சைக்கிள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று அதிகாலை வீடுடைத்து உட்புகுந்து குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து 11 பவுண் நகை,3 தொலைபேசிகள், 2 இலட்சம் ரூபாய் காசு, ஒரு மோட்டார் சைக்கிள் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி பகுதியில் உள்ள வீடொன்றில் கணவன், மனைவி, இரு சிறுபிள்ளைகள் இருந்த நிலை 15

### வாளைக் காட்டி அச்சுறுத்தி

## யாழில் மனைவியை கடத்திய கணவனால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு குடத்தனை மாளிகைத்திடல் பகுதியில் கணவனால் மனைவி கடத்தப்பட்ட சம்பவம் நேற்று காலை இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கணவனும் மனைவியும் சில மாதங்களாக பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் 15

### சட்டநாதர் கோவில் அருகில்

## பட்டப்பகலில் வீடு புகுந்து பணம், நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுகுட்பட்ட நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் நேற்று முற்பகல் வெளிநாட்டு பணம், தங்க சங்கிலி, தோடு, என்பன திருடப்பட்டுள்ளன.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்லூர் சட்டநாதர் 15

## தையிட்டி விகாரைக்கு எதிராக மீண்டும் கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தையிட்டியிலுள்ள சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை அகற்ற வலியுறுத்தியும் பொதுமக்களது காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என கோரியும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெ 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியில் கச்சேரிக்கு அண்மையில் 3 1/2 பரப்பு காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு.
55 (SL Rs.) மில்லியனுக்கு மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

(16830)

மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk
+44 796 374 3585 (Whatsapp)
021 222 7141 (Sri Lankan no)


# இலங்கை வங்கி மக்கள் வங்கி இன்று திறக்கப்படும்

(கொழும்பு)

போயா தினமான இன்று புதன்கிழமை இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியன திறக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அஸ்வெசும பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் வகையில் இரண்டு அரச வங்கிகளும் திறக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். (ம-7,9)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள திருத்தங்களை இணைத்து உரிய சட்டத்தை திருத்தியமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான பிரேரணை நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் நேற்று முன்தினம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அந்த முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

27-02-2023 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்கி, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக வரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது.

அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில சரத்துக்கள் தொடர்பில் ஆர்வமுள்ள தரப்பினர் சமர்ப்பித்த கருத்துக்களை கருத்திற்கொண்டு குறித்த சட்டமூலத்தில் தேவையான திருத்தங்களை முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)


## நாகபூஷணி திருமண சேவை

MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA

கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும்.

(C-7161)

264, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596, 071 999 9306


## யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் - முழுநேர ஒப்பந்த அடிப்படையிலானது

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காகவும் 2023.09.15ஆம் திகதி முதல் நியமிக்கப்படும் வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நியந்தனைகள்**

1. முழுநேரமாக யாழ்.மாநகர சபையில் கடமையாற்ற வேண்டும்.
2. இந் நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் மாநகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச் சேவை நீடிக்கப்படலாம்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும் தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் மாநகர சபையின் சார்பில் நீதிமன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. மாநகர சபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப் படுத்தல் வேண்டும்.
5. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**கொடுப்பனவு விபரம்**

1. மாதாந்த கொடுப்பனவு ரூபா 125,000 ஆகும்.
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக மாதாந்த கொடுப்பனவின் எட்டு வீதமான (8%) தொகை மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து கழிக்கப்படும்.
3. மாதாந்த கொடுப்பனவின் பன்னிரண்டு வீதமான (12%) தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மூன்று வீதமான (3%) தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் சபை நிதியிலிருந்து செலுத்தப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகர சபையால் நியமிக்கப்படும் தேர்வுக் குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் "ஆணையாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 12.09.2023 மு.ப.10.30

ஆணையாளர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்
30.08.2023

(C-7159)

குருவே துணை



வாழ்க வளமுடன் வாழ்க வையகம்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் உலகமே உவந்து போற்றும்

## 'மனைவி நல வேட்பு நாள்'

பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரை விட்டுப் பிரிந்து வந்து,பெருநோக்கில் கடமையறம் ஆற்றப், பற்றற்ற துறவியெனக் குடும்பத்தொண்டேற்றுப் பண்பாட்டின் அடிப்படையில் எனைப் பதியாய்க் கொண்டு என் நற்றவத்தால் என் வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை நல நோக்கில் அன்போடு கருணை இவை கொண்டு மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன் மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

காலம்:30.08.2023 (புதன்கிழமை) | நேரம்: 4.00 மணி | இடம்: அறிவுத்திருக்கோவில்

தலைமை: மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
(தலைவர் - யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்)

**நிகழ்ச்சி நிரல்**

இறை வணக்கம், குரு வணக்கம் துணைப் பேராசிரியர் அருள்நிதி M.சாந்தகுமாரி அவர்கள்
தவம், துணைப் பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணன் அவர்கள்
வாழ்த்துரை, துணைப் பேராசிரியர் அருள்நிதி த.குழந்தைவேல் அவர்கள்
(மண்டலத் தலைவர் - யாழ்ப்பாணம், துணை தலைவர் யாழ்ப்பாண மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
வரவேற்புரை, மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி வே.பாஸ்கரன் அவர்கள்
(செயலாளர் - யாழ்ப்பாண மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
சிறப்பு தம்பதியினர் அறிமுகம் மற்றும் தலைமை உரை,
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள்
(தலைவர் - யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பணம் அறிவுத் திருக்கோவில்)
காந்த பரிமாற்றத்தவம்,
மனவளக்கலை முதுநிலை பேராசிரியர் அருள்நிதி Dr. K.பெருமாள் அவர்கள்
சிறப்பு உரை, பெண்ணின் பெருமை
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி L.செல்வி அவர்கள்
அனுபவ உரை
நன்றியுரை துணைப் பேராசிரியர் அருள்நிதி ம.சந்துரு அவர்கள்

(C-7160)

தொடர்புகளுக்கு : யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 222 2772, 076 857 1395, 077 891 6407

## நீங்காத நினைவுகளுடன்
## 15 ஆவது ஆண்டு

அன்னை மடியில் 30 . 08 . 1990



இறைவன் அடியில் 15 . 08 . 2008

## செல்வி கணேசலிங்கம் பத்மஜா

காலனவன் தன் கணக்கை சாலவே
செய்யவே மண் விட்டு
வானம் சென்றீரோ?
வானம் சென்ற உமை நினைத்து
கண்ணீர் விட்டு கரைகிறோம்
ஆற்றுவாரில்லை ஆறுதல் சொல்ல
சொற்கள் இல்லை.

(C-7158)

பேக்கரி வீதி, புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறான தகவல்களை வழங்கி நலன்புரிக் கொடுப்பனவுகளை பெறுபவர்களுக்கு எதிராக சட்டம் பாயும்

### அமைச்சர் செஹான் சேமசிங்க

**(கொழும்பு) அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளுக்காக தவறான தகவல்களை வழங்கிப் பணத்தை பெற்றுக் கொள்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன் இதுவரை முறைகேடான வகையில் பெற்றுக் கொண்ட நலன்புரி கொடுப்பனவுகள் அனைத்தும் மீள அறவிடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அஸ்வெசும நலன்புரித் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், அஸ்வெசும நலன்புரித்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 இலட்சம் பயனாளர்களில் வங்கி வைப்பு உள்ளிட்ட சரியான தகவல்களை வழங்கிய 8 இலட்ச பயனாளர்களுக்கு கடந்த மாதத்துக்கான கொடுப்பனவுகளை வழங்க திறைசேரி 5 பில்லியன் ரூபாவை சகல அரச வங்கிகளுக்கும் விடுவித்துள்ளது.

இந்த நிலையில், தவறான தகவல்களை வழங்கி நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்பவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதுவரை காலமும் முறைகேடான வகையில்



பெற்றுக்கொண்ட கொடுப்பனவுகள் அனைத்தும் மீண்டும் அறவிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (நி)

## பிறப்புச் சான்றிதழ் இல்லாதோருக்கு தே.அ.அட்டை வழங்கத் தீர்மானம்

(கொழும்பு) பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதோருக்கு அடையாள அட்டைகளை வழங்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

40 வயது பூர்த்தியடைந்தவர்களுக்காக இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு, அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்தி தெரிவித்தார்.

அதனடிப்படையில், குறிப்பிட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட, வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள 40 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## எயிட்ஸ் நோயாளர்கள் பல மடங்காக அதிகரிப்பு

(கொழும்பு) 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு பகுதியில் இலங்கையில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது.

தேசிய எஸ்டிடி - எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம் இந்த விபரங்களை வெளியிட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு பகுதியிலேயே எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது.


இரண்டாவது காலாண்டு பகுதியில் 181 புதிய எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இக்காலப்பகுதியில் புதிதாக அடையாளம் காணப்பட்ட நோயாளிகளில் 26 ஆண்களும் 3 பெண்களும் 15 முதல் 24 வயதுக்கு உட்பட்டவர்கள். ஏனையவர்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இதேகாலாண்டு பகுதியில் எயிட்ஸினால் 13 உயிரிழப்புகளும் இடம்பெற்றுள்ளன. (நி)

## இனவாதத்தைக் கக்கி ஆட்சிக்கு வர முடியாது

### அடித்துக் கூறுகின்றார் ரணில்



(கொழும்பு) இனவாதப் பிரசாரச் சூழ்ச்சியால் ஆட்சியைப் பிடிக்க நாட்டு மக்கள் ஒருபோதும் அனுமதி வழங்க மாட்டார்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இனவாதக் கருத்துக்களைக் கக்கி ஆட்சிப்பீடம் ஏற எத்தனிப்பவர்கள் கடந்த கால வரலாறுகளை மறக்கக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஆட்சியை எந்தத் தரப்புக்கு வழங்குவதென நாட்டு மக்களே முடிவு செய்வார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், நாட்டு மக்களை எவரும் முட்டாள்களாக்க முடியாது என்றும் அவர்களே ஜனநாயக வாதிகளையும், இனவாதிகளையும் அடையாளம் கண்டுவிட்டார்கள் என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

## மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தும் செயல்களுக்கு அரசு இடமளிக்காது

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு) பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு செயற்பாடுகளுக்கும் அரசாங்கம் இடமளிக்காது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பொலிஸ் அதிகாரிகளின் நியமனங்களின் போது, அரசியல் தலையீடுகள் இடம்பெறுவதைத் தடுத்து உள்ளோம்.

கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த பொலிஸாரின் நலன்புரி சேவைகள் பலவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

தற்போது இணையவழி ஊடாக கடவுச் சீட்டுகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு செயற்திறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்கில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் செயற்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களை நவீனமயப்படுத்த அவசியமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை இந்நாட்டில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இனிமேலும் செயற்பட முடியாது.

மேலும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும் செய்ய எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார். (நி)

## தொல்பொருள் பெறுமதி வாய்ந்த சுமார் 1400 இடங்கள் அழிப்பு

### அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு) 2008 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில், தொல்பொருள் பெறுமதிவாய்ந்த சுமார் ஆயிரத்து 400 இடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நெதர்லாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட கண்டி இராச்சிய காலத்தைச்சேர்ந்த 6 தொல்பொருட்களை மீள நாட்டிற்கு கொண்டு வரும் வாய்ப்பும் கிட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தாம் குறித்த அமைச்சைப் பொறுப்பேற்றதன் பின்னர், அது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்து, குறித்த செயற்பாடுகளை கட்டுப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கிடைக்கப் பெறும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தொல்பொருள் இடங்களை பாதுகாப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். இதேவேளை, தொல்பொருள் தொடர்பான திருத்தச் சட்ட மூலம் ஒன்றை பாராளுமன்றில் முன்வைக்கவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் தகவல்களை வழங்கும் நபர்களுக்கு ஒரு தொகையினை வழங்கும் வகையில் திருத்தங்கள் கொண்டு வரப்படும் என அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## அனைத்து வழிகளிலும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்-ஐ.நா

(கொழும்பு) இலங்கையின் அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் முடிந்த ஒத்துழைப்புகளை வழங்குவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் எண்டர் பிரேன்ச் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த உலகில் சுமார் 20 நாடுகளில் விரைவாக மீண்டு, இயல்பு நிலைக்கு வந்த இலங்கையை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் எண்டர் பிரேன்ச் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் நீதி அமைச்சில் இடம்பெற்றது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், ஊழல் எதிர்ப்பு சட்டம், மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை. இனங்களுக்கிடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நல்லிணக்க செயல்முறை தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

யுத்தத்துக்கு பின்னர் இனங்களுக்கிடையில் ஒத்துழைப்புகளை முன்னேற்றுவதற்காக மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை முறைகள் தொடர்பாக வதிவிட ஒருங்கிணைப்பாளர் இதன்போது கேட்டறிந்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வாலிப கிண்ணம்’ உதைபந்தாட்ட போட்டி
## சாவல்கட்டு மகாத்மா, ஊரெழு றோயல் அணிகள் வெற்றி





இளவாலை வருத்தப்படாத வாலிப சங்கம் தனது 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 பேர் உள்ளடக்கிய “வாலிப கிண்ணம்” மாபெரும் உதைபந்தாட்ட போட்டி இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து சாவல்கட்டு மகாத்மா அணி மோதியது.

ஆரம்பத்தில் இருந்து மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதல் பாதியாட்டத்தில் மகாத்மா 2 கோலினையும் நவஜீன்ஸ் 1 கோலினையும் பெற்றது.

இரண்டாவது பாதியாட்டத்தில்நவஜீவன்ஸ்1கோலை பெற போட்டி 2:2 ஆனது. பின்னர் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் இரு அணிகளும் கோல் போடும் சந்தர்ப்பங்களை தவறவிட போட்டி 2:2 என்று சமனிலையில் முடிவுற்றது.

வெற்றியை தீர்மானிக்க நடைபெற்ற சமனிலை தவிர்ப்பு உதையில் 6:5 என்ற கோலடிப்படையில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு தெரிவானது சாவல்கட்டு மகாத்மா அணி. மகாத்மா அணி சார்பாக இரு கோல்களையும் ரஜதீபன் பெற்றுக் கொடுத்தார்.

நவஜீவன்ஸ் சார்பாக சஞ்சீபன், விணிகரன் தலா 1 கோலை பெற்று கொடுத்தனர். போட்டியின் ஆட்ட நாயகனாக மகாத்மா அணியின் கோல் காப்பாளர் செந்தூரன் தெரிவு செய்யப்பட்டார். அடுத்த ஆட்டமாக ஊரெழு றோயல் அணியை எதிர்த்து சகாயபுரம் நியூ ஸ்டார் அணி மோதியது.

ஆரம்பத்தில் இருந்து மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதல் பாதியாட்டத்தில் எடிசனின் அபார கோலின் மூலம் றோய்ல் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியாட்டம் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போதும் இரு அணிகளும் கோல் போடும் சந்தர்ப்பங்களை தவறவிட போட்டி நேர முடிவில் ஊரெழு றோயல் அணி 1:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. போட்டியின் ஆட்ட நாயகனாக ஊரெழு றோயல் அணியின் வீரர் எடிசன் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2900

**அன்பு**

மதிய நேரத்தில நீண்ட நேரம் தூங்குறீங்களா?
ஆயுள் குறையலாம் என்கிறது முக்கிய ஆய்வு



இது மட்டும் உண்மைய இருந்தா நாங்கெல்லாம் செத்து இந்நேரம் பத்து வருஷம் ஆகியிருக்கும்!

**தீபன்**

தொண்டன்:- நீங்க சொன்ன மாதிரியே அஸிஸ்டெண்ட் கமிஷ்னரை போட்டு தள்ளிட்டோம் தலைவா...

அரசியல்வாதி:- நான் எப்படா சொன்னான்...



தொண்டன்:- டென்ஷனா இருக்கு... ஏ.சியைப் போடுங்கடான்னு நீங்கதானே தலைவா சொன்னீங்க...

**கீதா**

ஆசிரியர்:- இந்தப் பறவையோட காலைப் பார்த்து இது என்ன பறவை என்று கண்டுபிடி பார்ப்போம்.
மாணவன்:- தெரியலை.
ஆசிரியர்:- இது தெரியலையா? நீயெல்லாம் உருப்படவா போறாய்! உன் பேரு என்னடா?
மாணவன்:- என் காலைப் பார்த்து நீங்களே கண்டு பிடியுங்க பார்ப்போம்!
ஆசிரியர்:- ???

**வாசுகி**



குண்டாக இருந்தால் கொலஸ்ரோல் இருக்குதான்னு கேட்குறாங்க... ஒல்லியாக இருந்தால் சுகர் இருக்கான்னு கேட்குறாங்க... கோபமா பேசுனா பிரசர் இருக்குதான்னு கேட்கிறாங்க... சரி அமைதியா இருக்கலாம்னு பார்த்தா என்ன ஏதாவது பிரச்சினையான்னு கேட்கிறாங்க... என்னத்தைச் சொல்ல..?

**கரன்**


வாங்க நீங்க யாரு புது பிரச்சனையா



வந்து டோக்கன் போட்டு லைன்ல நில்லுங்க ஏற்கனவே இங்க பல பிரச்சினைகள் ஓடிக்கிட்டு இருக்கு

**ராஜி**

எல்லாருடைய வீட்டிலேயும் 4 பிளாஸ்டிக் சேர் இருக்கும் மாமா...
உட்காரவா மாப்பிள்ளை



2 சேர் உட்கார்ந்து TV பார்க்கிறதுக்கு...
2 சேர் துவைச்ச துணியை மடிக்காம போட்டு வைக்க!!

உங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி

# நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய 3 மாணவர்கள் தெரிவு





(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட பளுதூக்கல் போட்டிக்கு யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த 3 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

மாகாண மட்ட பளுதூக்கல் போட்டி கடந்த 8, 9 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இதன்போது நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த திணியன் 20 வயது ஆண்கள் பிரிவு முதலாம் இடத்தையும் புளோறிஸ்டா 20 வயது பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தினையும் அபினையா 17 வயது பெண்கள் பிரிவில் நான்காம் இடத்தினையும் பெற்று தேசியப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர். (4)

# சீன ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி வழங்கப்படவில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஷியான் சிக்ஸ் சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.


இது தொடர்பான கோரிக்கையை மேலும் ஆராய்ந்து வருவதாக வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல் இலங்கைக்கு வரும் திகதிகள் தொடர்பில் எவ்வித அறிவிப்பும் வெளியிடப்படவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் வெளிவிவகார அமைச்சு மற்றும் நாரா நிறுவனம் விடுத்த கோரிக்கைக்கு அமைய குறித்த கப்பலுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறியிருந்தது.

எவ்வாறாயினும் கடல்சார் பாதுகாப்பில் கவனம் செலுத்தி சீன ஆராய்ச்சிக் கப்பலின் வருகை குறித்து இந்திய அரசாங்கம் இலங்கையிடம் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தேர்தலில் போட்டியிட தயாராகும் அநுரகுமார



(கொழும்பு)

இலங்கையின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளராக, தாம் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று குழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிறைவேற்று குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (நி)





**மாமஞ்சம் மீதேறி நல்லை வீதியுலா வருகின்றான்**

முத்தைத்திரு பத்தித்திருநகை
புகழ் ஒலிக்க
பத்துத் தலையரக்கனை
அழித்த மருகனாய்
நித்தம் நியம மணியொலிக்கும்
சித்தர் வாழ்ந்த நல்லூர்-வீதியில்
நாரியரிருவர் பாகனாய்
முத்துக்குமாரன் -மா
மஞ்சம் ஏறி வீதி உலா வருகின்றான்

ப. பாலசுப்பிரமணியம்(ஜே.பி)
வேலணை.

**தாள் பணிந்தோம்**

மஞ்சத்தில் நீ அமர்ந்து மனம்
மகிழ்வு கொண்டாயே-முருகா
கொஞ்சம் நில் உன் கவினைக்
காணக் கண் ஆயிரம் வேண்டும்-எம்
நெஞ்சத்தில் நீ நிறைந்து
நிம்மதியைத் தருவாயே உன்னைத்
தஞ்சமென அடைந்தோமே உன்
தாளிரண்டைப் பணிந்தோமே.

எஸ்.கே.மனோகரன்,
சுன்னாகம்.


# இராசிபலன்

30.08.2023
ஆவணி 13, புதன்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 10.50 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 10.03 மணிவரை

சுபநேரம் -4.35-6.05 மணிவரை
இராகுகாலம்-12.05-1.35 மணிவரை
பூரணை விரதம்

சந்திராஷ்டமம்-
புனர்பூசம், பூசம்.

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், தேக நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**துலாம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**மகரம்** கும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், அதிஷ்ட வாய்ப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**கும்பம்** சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாடு மகத்துவம் தரும், பகை விலகி பாசம் கூடும் நாள், பயணங்கள் கைகூடும்.

**கன்னி** இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்குபடுத்த முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா நேற்று சிறப்பாக இடம் பெற்றது. (படங்கள்:-கஜிந்தன்)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இளங்கலைஞர் மன்றத்தால் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசை அரங்கு நிகழ்வில் நாளை 31 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு திருநெல்வேலி அநுராகம் கவின் கலை நிலையத்தினரால் வீணை இசை நடத்தப்படவுள்ளது.

இதன்போது மிருதங்கம்-லி.மதிரூபன், தபேலா-எஸ்.தில்லைச்சிவன், நெறியாள்கை-வெ.விஜயபாரதி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 7.15 மணிக்கு நடைபெறவுள்ள இசைஅரங்கு நிகழ்வு பாட்டு- தி.கருணாகரன், வயலின்-ச.திவாகரன், மிருதங்கம்-பா.ஞானவேல், கடம்-த.தஷானன் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (4)

## நல்லூரில் இருந்து கொக்கட்டிச்சோலை நோக்கி பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபையானது கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேர்த்திருவிழாவை முன்னிட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் வரை புனித திருத்தல தரிசன பாதயாத்திரையை ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கைத் திருநாட்டில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களுக்கிடையிலான பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர வேண்டி மேற்படி பாதயாத்திரை முன்னெடுக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை காலை 7.30மணிக்கு நல்லூர் ஆலயத்தில் ஆரம்பிக்கும் பாதயாத்திரை சிவலிங்கம் தாங்கிய ஊர்தி சகிதம் ஏ9வீதியூடாக பல ஆலய தரிசனங்களுடன் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேர்த் திருவிழாவில் இணைந்து கொள்ளவுள்ளது.

பாத யாத்திரையில் பங்குபற்றும் அடியார்கள் பாதணிகளை விடுத்து,கலாசார விழுமிய உடை அணிந்து கலந்து கொள்ள வேண்டுமென இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமய தொண்டர் சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-6-30)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிவலயக் கல்விப் பிரிவில் உள்ள வகை- II, வகை- III பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வகை II ஐச் சேர்ந்த எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை, மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம், வகை III ஐச் சேர்ந்த கரம்பகம் அ.த.க பாடசாலை, குடம்பியன் அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வயலக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (நி)

# 'வீரசூரி' விருதுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தினரால் வழங்கப்படும் உயர் விருதான 'வீரசூரி' விருது வழங்கப்படவுள்ளது என சங்கத் தலைவர் ப.தருமகுமாரன் தெரிவித்துள்ளார்.

இவ்விருதுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் உடற்கல்வி டிப்ளோமாதாரி நியமனம் யாழ்.பல்கலைக் கழகத்தில் பெற்றிருக்க வேண்டும்.

கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களை தேசிய வெற்றியை பெறச் செய்திருத்தல் வேண்டும்.

நியமனம் பெற்ற பாடசாலை அல்லது இடம்மாற்றம் பெற்ற நிரந்தரப் பாடசாலையாக இருக்க வேண்டும்.

2019 ஆம் ஆண்டின் பின் மாணவர்களிற்கு தேசிய வெற்றியை பெறச் செய்தவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் அதிபர் அல்லது உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். (4)

## சிறுதொழில் முயற்சியாளர்களின் விற்பனைக் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவால் நடத்தப்படும் "யாழ் முயற்சியாளர் - 2023" விற்பனைக் கண்காட்சி நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றிற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் யாழ்ப்பாணம், நல்லூர், முத்திரைச்சந்தி அருகாமையில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் ஆரம்பமான கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நூறு வரையான முயற்சியாளர்கள் பங்கேற்றுள்ள கண்காட்சியினை பார்வையிட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு தரமான உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து பயன் பெறுமாறும் யாழ்.மாவட்டச் செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது. (நி-33-104)

## 5 நூல்கள் வெளியீட்டு விழா

(சாவகச்சேரி)

பொதுச்சுகாதார பரிசோதகரும் கவிஞருமான ஆ.ஜென்சன் றொனால்ட் (சூரிய நிலா) எழுதிய 5 நூல்களின் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி சி.சுதோகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4-6-30)

# பாழடைந்த வீடுகளில் போதை நுகரும் கும்பல்

## யாழில் அச்சத்தில் மக்கள்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் நகர்ப் பகுதி, மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஆட்கள் அற்ற, பாழடைந்த வீடுகளில் மாலை வேளைகளில் ஒன்று கூடும் போதைக்கு அடிமையான கும்பல்கள் போதைப் பொருட்களை நுகர்ந்து கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

அந்தக் கும்பல் வீடுகளுக்குள் இருந்து பெரும் குரல் எழுப்பி சத்தங்களையும் எழுப்புவதனால், அவ்வீடுகள் அமைந்துள்ள வீதிகளால் பயணிப்போர் அச்சத்துடனேயே பயணிக்கின்றனர்.

யாழில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வரும் நிலையில், ஊசி மூலம் போதைப் பொருளை உட்செலுத்துவதாலும் தொடர்ந்து போதையை நுகர்வதால் கிருமித் தொற்றுக்கு இலக்காகியும் உயிரிழப்புக்கள் ஏற்படும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

இதனால் சந்தேகத்திற்கு உரிய இடங்களில் பொலிஸார் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-33)

கொக்குவில் மஞ்ச வனப் பதி முருகன் ஆலய தேர்த் திருவிழா நேற்று சிறப் புற இடம்பெற் றது.



# ஆதி மயிலிட்டி பூதவராயர் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆதி மயிலிட்டி ஸ்ரீ பூத நாயகி சமேத காசி பூதவராயர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 3 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவுள்ள இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 92.1 மில்லியன் முட்டைகள் இந்தியாவில் இருந்து இறக்குமதி

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

அடுத்த 3 மாதங்களில் இந்தியாவில் இருந்து 92.1 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி முன்வைத்த தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையால் பரிந்துரைக்கப்பட்ட 3 இந்திய நிறுவனங்களிடமிருந்து இலங்கை அரசாங்கம் விலைக் கோரல் மனுவை வினவியுள்ளது.

விலை விபரங்களின் அடிப்படையில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை கருத்திற்கொண்டு, அரச வர்த்தக (இதர) கூட்டுத்தாபனத்தின் ஊடாக முட்டைகள் இறக்குமதி செய்யப்படும் என அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. முட்டையின் விலையை ஸ்திரப்படுத்தும் வகையிலும் உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையிலும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை முன்னர் அனுமதி வழங்கியிருந்தது. (நி)

# ஐ.தே.க-ஐ.ம.ச விரைவில் இணையும்

## அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை சமரசம் செய்ய, உள்ளக கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு கட்சிகளும் அண்மைக் காலமாக ஒருவருக்கு ஒருவர் பகிரங்கமாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்த போதிலும் அவை தற்போது சற்று குறைவடைந்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இரு கட்சிகளையும் ஒன்றிணைக்க ஐக்கிய தேசியக் கட்சி முனைப்பு காட்டிய போதும் சஜித் பிரேமதாஸ மற்றும் ரணில் விக்கிரமசிங்க தரப்பில் உள்ள சிலர் கட்சிகளின் இணைப்புக்கு அஞ்சுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் எதிர்வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் இரண்டு கட்சிகளும் இணைவது குறித்து தகவல்கள் வெளியாகும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 550 | 600 |
| தக்காளி | 200 | 150 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 200 | 240 | 250 |
| கரட் | 350 | 340 | 450 | 450 |
| பூசணி | 80 | 100 | 100 | 100 |
| புடோல் | 80 | 70 | 120 | 200 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | 220 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 80 | 120 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 150 | 160 | 200 |
| பயற்றங்காய் | 150 | 160 | 140 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 100 | 150 | 150 |
| கறிமிளகாய் | 350 | 250 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 250 | 200 |
| போஞ்சி | 450 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 120 | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 600 | 600 | 800 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 300 |
| வெங்காயப்பூ | 260 | 250 | 250 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 50 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 50 | 80 | 120 |


# பெயர் மாற்ற அறிவித்தல்

நவக்கிரி புத்தூரை சொந்த முகவரியாகக் கொண்ட இந்திரா (638302918 V) ஆகிய எனது பெயரை இன்று முதல் இந்திராதேவி எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன்.

இனிவரும் காலங்களில் இந்திராதேவி எனும் பெயரையே எனது சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இத்தால் இலங்கை சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(16884) **உண்மையுள்ள இ. இந்திராதேவி** 30.08.2023



உ
ஓம் நமசிவாய
ஓம் சரவணபவ

**வேல் பிடித்து நிற்பவன் நல்லைக்கந்தன்
பக்தி பூரணமாகச் சரணடைந்து கந்தர் அநுபூதி ஓதி
கால்பிடித்து தொழ நம்மைக் கரம் பிடித்து உயர்த்துவான்.**

**குமரா சிவன் சேய்குறக்கன்னி நாதா
குகா கந்த சேனாப தீ சக்தி பாணீ
எமரர்வப் பரபோதகர காரீ மயூரா
இனா நீவுவாய் செந்திலாயஞ் சலென்னே**

இந்தப் பிரார்த்தனையாகிய, சுப்பிரமணிய புயங்கத்தில் ஆதிசங்கர் உலகில் பிறந்து உழன்று அவதியுறும் எல்லோரையும் கந்தன் நிரந்தரமாகக் காப்பாற்றி அருள் புரியுமாறு அமைதியாக வணங்குவோம்.

" ஓம்கந்தா"
நல்லைக்கந்தனே பராசக்தியின் உருவாகிய
சக்திவேலை வைத்திருப்பவனே குமரா!
ஈசன் மகனே! குஹா! கந்தா தேவர்கள்
சேனையின் அதிபதியே! மயில் வாகனனே
வேடர் குல மங்கை வள்ளியின் வள்ளளே!
மனக் கவலைகளைப் போக்குபவனே! ப்ரபோ!
தாரகாசுரனை சம்ஹாரம் செய்தவனே!
எங்களை எப்போதும் எங்கும் காப்பாற்றுவாய்!
ஓம் நல்லைக் கந்தா



அருணகிரிநாதர் வேல்! வேல் வகுப்பிலே சொல்வார்;
**"துதிக்கும் அடியவர்க்கு ஒருவர் கெடுக்க இடர் நினைக்கின்ற
அவர் குலத்தை முதலறக்களையும் எனக்கு ஓர் துணையாகும்"**
யாரேனும் ஒருவர் முருகனை வழிபடும் அடியார்களுக்கு தீங்கு விளைவிக்க நினைத்தால் முருகனது வேல் அந்தத் தனிநபருடைய குலத்தையே அடியோடு அழித்து ஒழிக்கும், எனக்கு ஓர் துணையாக நிற்கும்.

**தீராப் பிணிதீர சீவாத் துமஞான
ஊராட்சியதான ஓர்வாக் கருள்வாயே
பாரோர் சிறைசேயே பாலாக் கிரிராசே
பேராற் பெரியோனே பேரூர்ப் பெருமாளே.**

முடிவே இல்லாத பிறவிப்பிணி முடிவு பெற சிவனாகிய ஆத்துமாவைப் பற்றிய இந்தச் சிற்றுயிர்க்கு உற்ற ஞான நிலையைத் தரவரும் ஓர் ஞான உபதேச மொழியொன்றை அருளுக! உலகோர்க்குத் தலைவனான சிவகுமரனே! செவ்வேளே! குறிஞ்சிவேந்தே! **ஓர் வாக்கருள்வாயே**

திருப்புகழ் இசைக்கக் கூடுதல் கவனம் தேவை என்பதால் பாடும்போது மன ஒற்றுமைப்பாடு தானாக வாய்க்கும் என்பதால் , திருப்புகழ் இவ்வாறு மனம் ஒருமைப்பாடு கூடுதல் கவனத்துடன் பாடலின் பொருள் உணர்ந்து, பாவத்துடன் பாடப் படுதலால் இயற்கையாகவே மனம் வேறு சிந்தனைகளில் செல்வது தடுக்கப்படும். அதிலுள்ள காம,க்ரோத,மோக,லோப,மதம், மாத்சர்யம் ஆகிய அழுக்குகள் மெதுவாக அகன்று மனம் தூய்மை அடைவதோடு அமைதியுறும். ஆன்மீக வழியில் நிலைபெறும்.

**தினம்,தினம்,காலை,மாலை,சிவபுராணம், கந்தர் அநுபூதி ஓதி
திருநீறு நெற்றியில் அணிந்து ஓதுவோம் ஓம் கந்தா! முருகா!**



உ
ஓம் நமசிவாய
ஓம் முருகா

**சந்நதிப் பதியில் கோயில் கொண்ட
அழகுமிகுந்த தேரில் எழுந்தருளி
அருள்மிகு வேல் முருகப் பெருமானே
அடியேன்களுக்கு அருள் பொழிய
திருவீதியில் உலாவருக உலாவருக.**



**"மொழியும் அடியார்கள் கோடி குறை கருதினாலும் வேறு
முனிய அறியாத தேவர் பெருமாளே"**

முருகனை துதிக்கும் அடியார்கள் கோடிக் கணக்கான குறைகளைக் கருதி அவனிடம் முறையிட்டாலும் அவர்களின் எண்ணத்திற்கு மாறாக அவர்கள் மீது கோபிப்பது என்பதையே அறி யாதவன் தேவர் பெருமானான முருகன் என்று கூறுகிறார் அருணகிரிப் பெருமான்.

விண்ணவரும்,மண்ணவரும் வாழ்வு வெய்த, வடம் பிடித்த அடியவர்கள் ஆனந்தக் கண்ணீரை மழையாகச் சொரிய அருள்மிகு விநாயகரும், வேலும், வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமான் தம்மைத் தஞ்சமடைந்தவர்களுக்கு அருள் நல் வாழ்வடைய அலங்கரித்த அழகு விளங்குகின்ற திரு வீதியில் சுற்றி வருவார். " ஓம் சந்நதி முருகா!"

தேவர்கள் சேனாபதியே அடியார்களைப் பாதுகாத்து ஆளும் சந்நதியானே திரு அருணகிரிநாதரின் திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி ஆகிய பாடல்களையும், திருமுறைகளையும் இனிமையை நுகரும் அன்னதானக் கந்தனே திரு வீதியில் உலாவருக "ஓம் கந்தனே" எண்ணிறைந்த உலக அடியார்கள் அள்ளிக் குடிக்கும் அருளாகிய அமுதக்கடலே உலா வருக.

**அனைத்து சைவப் பெரியோர்களும்
அனைத்து மாணவ, மாணவிகளையும்
திருநீறு தாமும் அணிந்து மற்றவர்களையும்
நெற்றியில் பரவி அணிந்து திருநெற்றியுடன்**

முருகனின் பத்மப் பாதங்களைப் புகலிடமாகக் கருதி தினசரி கந்தர் அநுபூதி சிவபுராணம் ஓதுவோம்.

**"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்"
ஔவையார் வாக்கு
மானிடம் செழிக்க மாமழை பொழிந்த
அருணகிரிநாதர் திருவடிகளை வணங்கி**



(சி-7157)

க.கு.கு.சிவபாலன் (K.K.K),
எழுத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலய போசகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 190

## ஒருவரின் தோற்றத்தை பார்த்து மதிப்பிடாதே

ஒரு சோப்பு தயாரிக்கும் நிறுவனம் ஒன்றிற்கு, வாடிக்கையாளர்களிடம் இருந்து தொடர்ந்து ஒரு புகார் வந்து கொண்டே இருந்தது.

புகார் என்னவென்றால், சில சமயம் சோப்புக்கள் இல்லாமல் வெறும் கவர் மட்டுமே உள்ளது என்பதுதான்.

கம்பெனி நிர்வாகம் இதற்கு ஒரு தீர்வு காண முடிவுக்கு வந்து, நிர்வாகத்தின் முக்கிய பொறுப்பாளர்கள் அனைவரும் ஒரு அறையில் இணைந்து ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

நிர்வாகத்தின் முதலாளி "சில சமயம் சோப்புக்கள் இல்லாமல் வெறும் காகிதம் மட்டும் இயந்திரத்தால் கவர் செய்யப்படுகிறது. இதற்கு ஒரு நல்ல தீர்வு கூறுங்கள்" என்று அங்குள்ள பொறுப்பாளர்களிடம் கூறினார்.

அதில் ஒருவர், "நாம் ஒவ்வொரு இயந்திரத்தின் பக்கத்திலும் ஒரு வேலையாளை நிறுத்த வேண்டும். அவர்கள் ஒவ்வொரு சோப்பாக பரிசோதித்து, பின் சோப்பு இல்லாமல் வரும் வெறும் காகிதத்தை தனியாக நீக்கிவிட வேண்டும்" என்று ஆலோசனை கூறினார். மற்றொருவர், "நாம் அவர்களுக்கு அதற்காகவே தனிச் சம்பளம் கொடுக்க வேண்டியது இருக்கும். இது வேலைக்காகாது. வேண்டுமென்றால் இவ்வாறு செய்யலாம், சோப்பின் எடையைக் கணக்கிடும் ஒரு இயந்திரத்தை, நம் இயந்திரங்களோடு இணைத்து விடுவோம். அது எடையைக் கணக்கிட்டு, எடையில்லாமல் வரும் வெறும் காகிதத்தை அகற்றிவிடும்" என்று கூறினார். அங்குள்ள அனைவரும் அவரின் ஆலோசனையைக் கேட்டு கைதட்டினர். அந்நிறுவனத்தின் முதலாளியைத் தவிர அங்கு வேலை செய்பவர்களிற்கு குறித்த யோசனை திருப்தி அளிக்கவில்லை.

அச்சமயம் அங்கு கதவு ஓரமாக நின்று கொண்டிருந்த ஒரு சிறுவன், இவர்களின் பேச்சைக் கண்டு சிரித்தான். அதனை கவனித்த முதலாளி அவனை அழைத்தார். "தம்பி, ஏனப்பா இவர்களைப் பார்த்து சிரிக்கின்றாய்?" என்று கேட்டார். அதற்கு அச்சிறுவன், "நான் அவர்களைப் பார்த்துச் சிரிக்கவில்லை. உங்களை நினைத்துத்தான் சிரித்தேன்" என்றான். சிறிது குழப்பத்துடன் "அதற்கு என்ன காரணமென்று நான் தெரிஞ்சுக்கலாமா?" என்று முதலாளி கேட்டார்.

"நீங்கள், இவர்களையெல்லாம் எப்படித்தான் இந்த கம்பெனில உயர் பதவில வச்சிங்களோ. அத நினைச்சுத்தான் சிரிச்சேன்" என்று அச்சிறுவன் கூறினான்.

அங்கிருந்த அனைவருக்கும் அச்சிறுவன் மேல் கோபம் வந்தது, "இங்க வேலை பாக்குறவங்களுக்கு டீ கொடுக்குற சின்ன பையன் நீ எங்கள பாத்து ஏளனமா பேசுற. இவன உடனே கம்பெனிய விட்டு வெளிய அனுப்புங்க சார்." என்று அனைவரும் சத்தமிட ஆரம்பித்தனர். அந்த நிறுவன முதலாளி அச்சிறுவனிடம் "ஏனப்பா அவ்வாறு கூறுகிறாய்?" என்று கேட்டார். இவர்கள் இருவர் கூறிய ஆலோசனைகளையும் அதற்கு இங்குள்ளவர்களின் கைத்தட்டலையும் பார்த்தேன். அதனால் தான் அவ்வாறு கூறினேன்" என்றான் அச்சிறுவன்.

அதைக் கேட்ட அனைவரும், "நீ என்ன எங்களவிட பெரிய அறிவாளியா? யோசனை சொல்ல வந்துட்டான். போ போய் டீ கொடுக்குற வேலைய மட்டும் பாரு" என்று அவனிடம் சத்தமிட்டனர். உடனே முதலாளி, "அனைவரும் அமைதியாக இருங்கள்.

தம்பி நீ சொல்ல வந்தத சொல்லுப்பா" என்று கூறினார். "அந்த சோப்பு எல்லாம் கவர் பண்ணி வர்ற வழியில அதற்கு நேரா ஒரு மின்விசிறியை மட்டும் ஓட விடுங்கள். சோப்பு இல்லாம வர்ற வெறும் கவர் மட்டும் காத்துக்கு பறந்து விடும். இதற்கு ஏன் தேவையற்ற வேலையாட்களையும் இயந்திரத்தையும் வீண் செலவு செய்து வைக்க வேண்டும்" என்று கூறினான். பின் அனைவரும் ஒன்றும் பேசவில்லை.

அன்றைய திகதியிலிருந்து சரியாக எட்டு வருடங்கள் கழித்து, அங்கிருந்த பொறுப்பாளர்களும் மற்றும் அந்த சிறுவனும் ஒரு நாள் மீண்டும் அந்த கம்பெனியில் காலடி எடுத்து வைத்தனர்.

அதனை தனக்குரிய அறையில் இருந்து கவனித்த நிர்வாகத்தின் முதலாளி உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சிறிது பதற்றம் அடைந்தார். காரணம், பொறுப்பாளர்கள் அனைவரும் நிர்வாகப் பொறுப்பாளர்களாகவே அந்த கம்பெனியினுள் நுழைந்தனர்.

அந்த சிறுவனோ, ஒரு மிகப் பெரிய கம்பெனியின் முதலாளியே எழுந்து வணங்கும் அளவிற்கு உயர்ந்தான். அச்சிறுவனின் பெயர் "கிங்மார்டின்"

## ஹிஜாப் சரியாக அணியாதவர்களின் தலைமுடியை மொட்டையடித்த ஆசிரியர்

### இந்தோனேசியா பாடசாலையில் சம்பவம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் ஹிஜாப் சரியாக அணியாத 14 முஸ்லிம் மாணவிகளின் தலைமுடியின் ஒரு பகுதியை மட்டும் ஆசிரியர் மொட்டை அடித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேசிய தீவில் உள்ள பாடசாலை ஒன்றில் ஹிஜாப் சரிவர அணியாத 14 முஸ்லிம் பெண்களின் தலைமுடியின் ஒரு பகுதியை மட்டும், ஆசிரியர் ஒருவர் மொட்டை அடித்த சம்பவம் அரங்கேறியுள்ளது. கிழக்கு ஜாவா நகரமான லமோங்கனில் உள்ள அரசு ஜூனியர் உயர்நிலைப் பாடசாலையில் இந்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

27 மில்லியன் மக்கள் வசிக்கும் நாட்டில் உள்ள கன்சர்வேட்டிவ் பகுதியில் முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் ஹிஜாப் அணிய கட்டாயப்படுத்தப்படுவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். இத்தகைய நடவடிக்கைகளால் 2021 ஆம் ஆண்டு முதல் இது போன்ற கட்டாய ஆடை விதிமுறைகளை தடை செய்ய நாடு முன் நகர்ந்து வருகிறது.

இதற்கிடையில் ஹிஜாப் சரியாக அணியாததால் மாணவிகளுக்கு மொட்டையடிக்கப்பட்ட சம்பவம் நடந்துள்ளது. இது தொடர்பாக தலைமை ஆசிரியர் ஹார்டோ பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோர்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார். இதில் தொடர்புடைய ஆசிரியரை பணிநீக்கம் செய்ய வேண்டும் என பல அமைப்புகளும் கோரிக்கை வைத்த நிலையில், இதில் சம்பந்தப்பட்ட ஆசிரியர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டு இருப்பதாகவும் தலைமை ஆசிரியர் ஹார்டோ தெரிவித்துள்ளார். (நி-5)

## இங்கிலாந்து வைட் தீவில் திடீரென தோன்றிய நீர்ச்சுழல்



(லண்டன்)

இங்கிலாந்தில் உள்ள தீவு ஒன்றில் கடல் நீரை மேகக்கூட்டங்கள் உறிஞ்சி நீர்ச்சுழல் உருவாகியுள்ளது.

இங்கிலாந்து வைட் தீவில் விடுமுறையைக் கழிப்பதற்காக சுற்றுலாப் பயணிகள் சென்றிருந்த போது, திடீரென வானுக்கும் கடலுக்குமாய் நீர்ச்சுழல் உருவானதைப் படம் பிடித்தனர். (நி-5)

## ஆப்கானிஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்

(காபுல்)

ஆப்கானிஸ்தானில் நேற்றுக் மு.ப 10.05 மணியளவில் நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோளில் 4.8 ஆக பதிவாகியுள்ளது.

முன்னதாக கடந்த 18 ஆம் திகதி காபூலில் 4.5 அளவிலான நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது.

நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாரிய சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## வடகொரி

## தயாராகுப்

### முறியடி

(கியாங்யாங்)

அமெரிக்கா- தென்கொ

தொடுக்கலாம் என்பதால் அ

இருக்கும்படி வடகொரிய இ

கப்பல் படை தினமான நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி கிம் ஜாங் உன் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடகொரியா தொடர்ந்து

ஏவுகணை

வரும் நி


தன்னை

அமெரிக்கா

ள்ளது.

அமெரிக்க

தீபகற்பத்தி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் பிரதமராக இருந்த போது பெற்ற பரிசுப் பொருட்களை கருவூலத்தில் சேர்க்காமல்

விற்பனை

பான வ

ஜாமீன் பெ

இம்ரான்

டுகள் சிறை

த்த செஷ

### சுவிஸ் பாராளுமன்ற

## ஈழத்து தமிழ் இ

## அருளீஸ்வரன்

(ஜெனிவா)

சுவிஸ் நாட்டின் பாராளுமன்ற தேர்தலில் பிரதான கட்சிகளில் ஒன்றான SP கட்சியில் துர்க்காவ் மாநிலத்தில் 246 உறுப்பினர்களை தெரிவு செய்யும் நிலையில் குறித்த கட்சியிலே ஈழத்து இளைஞன் அருளீஸ்வரன் போட்டியிடுகின்றார்.

இத்தேர்தல் வருகின்ற ஒக்டோபர் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அச்சுத் தொழில்நுட்பத் துறையை தனது வாழ் வியல் கற்றலாகக் கொண்ட அருளீஸ்வரன், யுனிசெவ் நிறுவனத்தின் சுவிஸ் கிளையில் இணைந்து பல்வேறு சமூக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற அங்கத்தவராக உள்ளார். அருளீஸ்வரன் தாயகத்தில் கட்டுவனைச் சொந்த இடமாகக் கொண்டவர். இவர் புலம் பெயர்ந்து சுமார் 30 வருடங்களாக

சுவி

க்கா

லத்தி

ம்பத்

வசித்

கின்ற

கால

ஈழ

இ

த

மு

யின்

ஸில்

என்று

விடுத்

ப்பட்டி

ளுமன்

ஞன்

க்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...காரியா மீது போர் தொடுக்க ...கும் தென்கொரியா, அமெரிக்கா

## ...முறியடிக்க தயாராகுமாறு கிம் உத்தரவு




**... - தென்கொரியா இணைந்து எப்போது வேண்டுமென்றாலும் வடகொரியா மீது போர் ...ன்பதால் அமெரிக்கா தலைமையிலான படையெடுப்பை முறியடிக்க, தொடர்ந்து தயார் நிலையில் ...டகொரிய இராணுவத்தை வடகொரிய ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.**

ஏவுகணை சோதனை செய்து வரும் நிலையில், தென்கொரியா தன்னை பாதுகாத்துக் கொள்ள அமெரிக்காவுடன் நட்பு வைத்துள்ளது. இதன் காரணமாக அமெரிக்க போர் கப்பல்கள் கொரிய தீபகற்பத்தில் கால்பதித்துள்ளன.

மேலும், அமெரிக்கா- தென் கொரிய இராணுவம் இணைந்து போர் பயிற்சியை கடந்த 21 ஆம் திகதி தொடங்கியது. இது வடகொரியாவை கோபத்திற்குள்ளாக்கியது. இதனால் அடிக்கடி வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆயுதத் தொழிற் சாலையின் நவீன ஆயுதங்களின் உற்பத்தியை அதிகரிக்க உத்தரவிட்டிருந்தார்.

மேலும், அமெரிக்கா- தென் கொரியா- ஜப்பான் உச்சி மாநாட்டினை தொடர்ந்து, அமெரிக்கா அணு ஆயுதம் தொடர்பான மூலோபாய சொத்துகளை (போர்க்கப்பல் உட்பட) குவித்து, பயிறசியில் ஈடுபட்டு வருவதை குறிப்பிட்டார். இதனால் கொரிய தீபகற்பத்தில் பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது. (நி-5)

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு ஜாமீன் அவரது தண்டனையை இடைநிறுத்தியது உயர் நீதிமன்றம்



விற்பனை செய்தது தொடர்பான வழக்கில் நேற்று ஜாமீன் பெற்றார்.

இம்ரான் கானுக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டன்ன விதித்த செஷன்ஸ் நீதிமன்ற தீர்ப்பை இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் இடைநிறுத்தியது.

மேலும், இந்த மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு உயர்நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

இம்ரான் கானுக்கு ஜாமீன் வழங்கிய இஸ்லாமாபாத் உயர்நீதிமன்ற நீதிபதிகள், இருதரப்பு வாதத்தையும் கேட்ட பின்னர் தீர்ப்பை ஒத்தி வைத்தனர்.

குறித்த வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, அவருக்கு கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து, பிடி தலைவர் ஜமான் பார்க் வீட்டில் வைத்து அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும், இந்த வழக்கில் இம்ரான் கானுக்கு ரூ.1 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட சில நாட்களுக்குள் தனது தண்டனையை எதிர்த்து இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் இம்ரான் கான் மேல்முறையீடு செய்தார்.

ஓகஸ்ட் 22 ஆம் திகதி இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் இந்த வழக்கின் முறையான விசாரணையைத் தொடங்கியது.

கடந்த வியாழக்கிழமை தனது வாதத்தை முடித்த இம்ரான் கானின் வழக்கறிஞர் லத்தீப் கோசா, இந்த தீர்ப்பு அவசரமாக வழங்கப்பட்டது என்றும் இதில் குறைபாடுகள் நிறைய இருக்கிறது என்றும் கூறியிருந்தார்.

இந்நிலையில், தற்போது இம்ரான் கானின் தண்டனை இடைநிறுத்தப்பட்டு, அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது. (நி-5)

# ...ளுமன்ற தேர்தலில் ...மிழ் இளைஞன் ...வரன் களத்தில்

...ன்ற ...ளில் ...காவ் ...களை ...றித்த ... அரு ...டாபர் ...ளது. ...மையை ...ாகக் ...செவ் ...யில் ...பாடு ...அங்க ...வரன் ...ாந்த ...புலம் ...ளாக



சுவிஸில் துர்க்காவ் மாநிலத்தில் குடும்பத்துடன் வசித்து வருகின்றார். எதிர்காலத்தில் ஈழத்து இளைய தலைமுறையின் 40 வீதமான பிள்ளைகள் சுவிஸில் முக்கிய பதவிகளை வகிப்பார்கள் என்று சுவிஸ் அரசு அண்மையில் விடுத்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் சுவிஸ் பாராளுமன்றத் தேர்தலில் ஈழத்து இளைஞன் களமிறங்கியுள்ளது பெருமைக்குரிய தொன்றாகும். (நி-5)

# புலம்பெயர்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு; இடமளிக்க முடியாமல் போராடும் இத்தாலி!



(உரோம்)

வடஆபிரிக்கா மற்றும் பால்கனிலிருந்து வரும் புலம்பெயர்வோருக்கு இடமளிக்க முடியாமல் இத்தாலி போராடி வருகின்ற நிலையில், நாட்டின் செஞ்சிலுவைச் சங்கம் சர்வேதேச முயற்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இத்தாலி - தெற்குப் புறக்காவல் நிலையமான லம்பேடுசா தீவில், வார இறுதியில் 4,200இற்கும் அதிகமான குடியேற்றவாசிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக அந்நாட்டின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள உள்ளூர் அதிகாரி,

"நான் 1990 களிலிருந்து புலம்பெயர்ந்தோர் தொடர்பான பிரச்சினைகளை கையாண்டு வருகிறேன். நான் எல்லாவற்றையும் பார்த்திருக்கிறேன்.

ஆனால் என்னால் இப்படியான ஒரு நிலைமையை கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. நகரம் அவசரநிலையில் உள்ளது." எனக் கூறியுள்ளார்.

இதேவேள்ள கடந்த ஆண்டு இதே கால கட்டத்துடன் ஒப்பிடும்போது, 53,000 பேர் சட்ட விரோதமாக கடல்வழி பயணங்களை மேற்கொண்டு இத்தாலிக்கு வருகை தந்துள்ளதாகவும், இதுவரை மொத்தமாக 107,500 இற்கும் அதிகமானோர் சட்ட விரோதமாக புலம்பெயர்ந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியால் சென்ற பட்டா தீப்பிடித்து எரிந்து நாசம்



(யாழ்ப்பாணம்)

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பட்டா ரக வாகனம் ஒன்று திடீரென தீப்பிடித்து முற்றாக எரிந்துள்ளது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் வல்லை சந்திப்பகுதியில், நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பொருட்கள் ஏற்றும் பட்டா வாகனமே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

தீ விபத்துக்கு மின் ஒழுக்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-33-60)

# போஷாக்கு உலருணவுத் திட்டத்தில் கரைச்சியில் 7,022 பயனாளிகள் தெரிவு



(கண்டாவளை)

உலக உணவுத் திட்டமானது கிளிநொச்சி மாவட்டத்தில் உணவுப் பாதுகாப்பை ஊக்குவிக்கும் நோக்கில், கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் போஷாக்கு உலருணவு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியுள்ளது.

அதனடிப்படையில், குறித்த திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

இத்திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள், நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், குறைந்த பொருளாதார வசதியுடைய குடும்பங்கள் என்ற வகைகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு போஷாக்கு உலருணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உலருணவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 7,022 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இரண்டு மாத காலப் பகுதிக்கான 24 கிலோ கிராம் அரிசி, 20 கிலோ கிராம் கடலைப் பருப்பு, 5 லீற்றர் தேங்காய் எண்ணெய் வழங்கப்படவுள்ளன. குறித்த உலருணவு விநியோகம் அக்கராயன், கரைச்சி கிழக்கு, கரைச்சி தெற்கு ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக வழங்கப்படவுள்ளது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன், உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதி பணிப்பாளர் ஜெராட் ரொபெல்லோ, உலக உணவுத் திட்ட அரச இணைப்பாளர் முஸ்தபா நியமத் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு உணவுத் திட்டத்தினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். (4-315-316)

# 2023-2024 பெரும்போகத்தில் 28,779 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் கிளிநொச்சியில் நெற்செய்கை

## கிளி.விவசாயப் பணிமனை தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2023-2024 பெரும் போகத்தில் 28 ஆயிரத்து 779 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கையும் 2 ஆயிரத்து 300 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சிறுதானியப் பயிர்களும் ஆயிரத்து நூறு மரக்கறிப் பயிர்களும் பயிரிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாயப் பணிப்பாளர் பணிமனையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளமான இரணைமடுக் குளம் மற்றும் கல்மடுக்குளம் உள்ளிட்ட ஒன்பது வரையான நீர்ப்பாசனக் குளங்கள், சிறிய நீர்ப்பாசன குளங்கள் உள்ளடங்கலாக மாவட்டத்தில் காணப்படுகின்ற 45 வீதமான நீர்ப்பாசனக் காணிகளிலும் ஏனைய 55 வீதமான மானாவாரிக் காணிகளிலும் நிலங்களிலும் நெற்பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இவ்வாறு பெரும் போகத்திற்கான உரம், கிருமி நாசினிகள், களை நாசினிகள் உள்ளிட்ட விவசாய உள்ளீடுகள் சரியாகக் கிடைக்கும் பட்சத்திலும் காலநிலை சீராக இருக்கும் சந்தர்ப்பத்திலும் பெரும் போகத்தில் 28 ஆயிரத்து 779 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் இருந்து ஒரு இலட்சத்து 46 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை உற்பத்தி உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

இதில் மாவட்டத்தின் உணவுத் தேவைக்கான 30 ஆயிரம் மெற்றிக் தொன் தவிர ஏனைய ஒரு இலட்சத்து 16 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-315)

# கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

விரைவு சேவை உணவகங்களில் வேலை வாய்ப்பிற்கான இலவச கற்கைநெறிக்கான நேர்முகத் தேர்வு நாளை காலை 9 மணிக்கு இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் இடம் பெறவுள்ளது. இக் கற்கைநெறியினை கற்பதன் மூலம் நிறுவனப் பயிற்சியுடன் கூடிய தொழிற் துறை பயிற்சியின் ஊடாக NVQ மட்டம் 4 இனை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அத்துடன் விரைவு சேவை உணவகங்களில் உடனடியாக வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களிற்கு உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை இல.12/4 கே.கே.எஸ் வீதி (வீரசிங்கம் மண்டபம் 4 ஆம் மாடி) யாழ்ப்பாணம் எனும் முகவரியிலோ அல்லது 021 222 7949, 021 221 1793, 077 716 1955 எனும் தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ள முடியும் என இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள்ளார். (4)

# ஆறறிவு படைத்த சிலரால் மேய்ச்சல் தரைக்கு தீ வைப்பு

(தருமபுரம்)



கனகாம்பிகை குளத்தில் மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகள் விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. கனகாம்பிகைக் குளத்தின் முன் பகுதியிலிருந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பின் பகுதி வரை உள்ள ஆற்றுப்படுகையின் இரு பக்கங்களும் மேய்ச்சல் தரைக்கு என ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவுகின்ற மிகவும் கடுமையான வெப்பமான காலநிலையில் குறித்த ஆற்றுப்படுகையின் ஈரம் காரணமாக அதனை சூழவுள்ள பகுதிகளில் பச்சையான புற்கள் காணப்படுகின்றன.

இதனால் அந்தக் கிராமங்களில் கால்நடைகளை வளர்ப்போர் அந்தப் பகுதிகளிலேயே தங்களுடைய கால்நடைகளை மேய்ச்சலுக்கு கட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் சிலர் குறித்த மேய்ச்சல் தரைக்கு தீ வைத்துள்ளனர் என கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித்துள்ளனர். இதனால் சுமார் ஆறு ஏக்கர் வரை எரிந்துள்ளதாகவும் கால்நடை வளர்ப்போர் தெரிவித்துள்ளனர்.


அம்மாவின் ஓராண்டு நினைவு

இம்மைக்கு 1932 - 12 - 16



மறுமைக்கு 2022 - 09 - 09

திருமதி.மகேஸ்வரி கந்தசாமி

(திதி- ஆவணித் திங்கள் பூர்வபக்க சதுர்த்தசி)

உங்கள் பரிசத்தின் உரசலின்றி
இன்குரலின் ஓசையின்றி
ஓராண்டு கரைந்தது
நினைவுகள் நதியாய்
நீண்டு பயணிக்கின்றன
பாரினில் எமக்குப் பாதைகள்
பல செய்தீரம்மா
நீள நினைந்திருப்போம்
நித்தலும் கைதொழுவோம்.

(16885)

வியாழவத்தை, நெல்லியடி, கரவெட்டி.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிறும் வளி வெப்பநிலை- நீர்ப் பற்றாக்குறையும் பரவும் காட்டுத்தீயும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எல்நினோவின் தாக்கம் தற்போது பரந்துபட்ட அளவில் உலக மக்களை அதிகம் பாதிப்படைய வைத்திருக்கின்றது. நாமும் அதற்கு விதி விலக்கல்ல. வளி வெப்பநிலை எகிறிக் கொண்டிருக்கின்றது. உடலில் ஒருவகை எரிச்சல் ஏற்படுவதனால் இவ்வாறான நிலைமைகளில் அனைவரும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

வரப்பே தலகாணி, வைக்கோலே பஞ்சு மெத்தை, வெற்றுடம்பே பட்டாடை என வாழ்ந்து வயலில் பயிர்களை விளைவிப்பவருக்கும் சோதனையான காலமிது. முன்பு போல காலை வேளையில் வெற்றுடலுடன் வயலில் இறங்கி வேலை செய்ய முடியாது. அளவுக்கதிகமான வெப்பத்தின் தாக்கம் உடலில் தோலை அதிகமாக சுட்டெரிக்கின்றது. பயிர்கள் விரைந்து வாடுவதும் வழமைக்கு மாறாக அதிகமான அளவு நீர்ப்பாய்ச்ச வேண்டியுமிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் நீர்ப்பற்றாக்குறையுள்ள இடங்கள் அடையாளங் காணப்பட்டாலும் அனைத்து இடங்களிலும் இவ்வாறான நிலைமை ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. இது மழைக்குரிய காலமில்லை என்றாலும் சில இடங்களில் அவ்வப்போது மழை தூறி மண்ணை நனைத்திருக்கின்றது. இந்த நனைப்பு எழுகின்ற உஷ்ணத்தினை தணிக்கப் போதாது.

**தாவர இழையங்களில் விளைச்சலில் பாதிப்பு**

பயிர்களில் அதிக உஷ்ணத்தின் காரணமாக குறிப்பாக அவற்றினது இலைகளில் ஒளித்தொகுப்பு பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் அதிக வெப்பநிலை தாவரங்களில் ஊட்டச்சத்து குறைவடைய ஏதுவாவதுடன் இலைப் பகுதியின் விருத்தியின்மை மற்றும் மகரந்த மணிகளில் பாதிப்பு இவற்றினால் மகரந்த சேர்க்கை பாதிக்கப்படும் போது விதை உற்பத்தியாதல் தவிர்க்கபடுகின்றது.

ஒளித்தொகுப்பு பாதிக்கப்படும் போது தாவரம் தேவையான உணவை உற்பத்தி செய்யாதிருப்பதனால் விளைச்சலும் அதிகளவில் பாதிக்கப்படும். இவ்வாறான நிலைமை தொடர்ந்து நீடித்தால் வயலில் உற்பத்தி குறைவடையும். ஏற்கனவே உள்ளீட்டுப் பொருட்களின் விலையேற்றத்தால் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயப் பெருமக்கள் அதிக வெப்பத்தால் விளைச்சலும் பாதிப்படையும் போது மனச்சோர்வடைகின்றனர்.

எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்காது விட்டால் அவர்களுக்கான ஆதாயம் மட்டுப்படுத்தப்பட்டுவிடும். வயலையே நம்பி வாழ்க்கை நடத்தும் விவசாய பெருமக்களுக்கு அதிகரித்த வெப்பம் நட்டத்தையே ஏற்படுத்தும். ஆதலால் விளைவிக்கின்ற பொருட்களுக்கு தரமான சந்தைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




அத்துடன் களஞ்சியவசதியும் அவசியம் ஏற்படுத்திக் கொடுத்தல் சிறப்பானதாகும். தமிழ்நாட்டு உழவர் சந்தையில் இவ்வாறான களஞ்சிய வசதிகளுடன் சந்தைக் கட்டமைப்பு அமைக்கப்பட்டிருப்பது இதற்காகத்தான். கொவிட் -19 இல் மீண்டும் களைகட்டிய "ஊர்ச்சந்தைகளை" மையப்படுத்துதல் இனி வருங்கால இடர்களை சமாளிக்க உதவும்.

**நீர்ப்பற்றாக்குறை**

நீர் தேங்கியிருக்கின்ற இடங்களில் அதிகரித்த உஷ்ணத்தினால் நீர் விரைவாக வற்றத் தொடங்கியிருக்கின்றது. நிலத்தடி நீரும் எமக்கு சொச்சமாகத்தான் காணப்படுகின்றது. வறட்சியினால் அதிகளவு நீர் உறிஞ்சப்படும் போது விவசாயக் கிணறுகள் உவர்த்தன்மையடைய வாய்ப்புக்கள் அதிகமாகும்.

இது விடயத்தில் ஒரு கிணற்றிலிருந்து பல குழாய்களைப் பொருத்தி ஒரேநேரத்தில் நீரை உறுஞ்சுவதைத் தவிர்த்து சுழற்சி முறையில் நீர்பாய்ச்சுவதனால் கிணறு வற்றாமலும் உவராகாமலும் தவிர்த்துக் கொள்ளலாம். இதிலாவது ஒற்றுமை அவசியம் இன்றேல் எவருக்கும் பின்நாளில் அந்தக் கிணறு பயனாகாமல் போகலாம். எத்தனை தடவைதான் அறிவுறுத்தினாலும் " எனக்கென்ன" என்னும் சுயநலத்தால் காலக் கிரமத்தில் எவருக்குமில்லாமலும் போகலாம். அட அதனையும் வரவேற்க ஒரு கூட்டமிருக்கிறது என்றால் பாருங்களேன்.

நீர்ப்பற்றாக்குறை எழும் போது பலவிதமான நோய்கள் பரவ வாய்ப்பிருக்கின்றது. களனிகளில் நீர் தேங்கும் இடங்களில் பிடிக்கப்படும் மீன்களை உட்கொள்வதில் அவதானம் வேண்டும்.

இறக்கின்ற மீன்களை பிடித்து விற்பனை செய்வதாகவும் ஒரு செய்தி உலா வருகின்றது. நீர்வற்றி அழுக்கான இடங்களில் இறக்கின்ற மீன்களில் உருவாகும் இந்நோய்கள் மீன்களை விலை மலி வென்றும் அலட்சியப்படுத்தியும் உண்பதனால் மனிதனில் இலகுவாக பாதிப்பேற்பட வாய்ப்புக்களுண்டு. இது தவிர எலிக் காய்ச்சலும் பரவுவதாக சுகாதாரத்துறை அறிவித்திருக்கின்றது. நீர் வற்றலின் போது விலங்குகளில் உள்ள தொற்று நோய்கள் மனிதனுக்கேற்பட வாய்ப்புக்கள் அதிகம். மேலும் சிறு விலங்குகள் என்றாலும் நீர் தேடி அலைந்து இறக்கின்ற மற்றும் அவற்றின் எச்சங்கள் மூலமாகவும் நோய்கள் பரவும் தன்மை அதிகம். பல சரக்குக் கடைகளில் சாக்குகளிலுள்ள தானியங்கள் அப்படியே திறந்து விட்டபடி கடையை மூடிச் செல்வதனை நீங்கள் அவதானிக்கலாம்.

இரவில் எலிகள் அனைத்து தானியப் பைகளிலும் சிறுநீர் கழித்தும் மலங்கழித்தும் சென்றிருப்பதனை அவதானிக்கலாம். நீங்கள் வாங்கும் உணவுப் பொருட்களுடன் எலியின் மலக் கழிவு (பிளுக்கை) காய்ந்து கலந்திருப்பதனை காணலாம். அதனை பிடைக்கும் போது அகற்றி விடுவது பலருக்குத் தெரியாது. இங்கேதான் இவை பற்றிய அறிவு அவசியமாகத் தேவைப்படுகின்றது. தவறின் அவற்றினாலேற்படும் நோய்களை தவிர்க்க முடியாது.

வெப்பநிலை அதிகரித்து நிலத்தடி நீர் போதாமையால் பல்லாண்டு கால தென்னை மரங்கள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். உயிர்காப்பு நீர்ப்பாசனம் அவசியம் இம்மரங்களுக்கு வழங்கப்படல் வேண்டும். தவறின் இம்மரங்களை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் நாம் தள்ளப்படுவோம்.

**காட்டுத்தீ**

இயற்கையழிவின் ஒரு பக்கம் எரித்தழிக்கும் காட்டுத்தீயாகும். அதிகரித்த வெப்பநிலையால் உலகெங்கும் காட்டுத்தீ உருவாகி பரவி பல அழிவுகளை ஏற்படுத்தியிருப்பதனை செய்திகள் பல தெரிவித்தாலும் எமது நாட்டிலும் இவ்வாறான காட்டுத்தீ உருவாகியிருக்கின்றது. அமெரிக்காவில் மட்டும் இவ் வருடம் பல இடங்களில் காட்டுத்தீ பரவியிருக்கின்றது. அரிசோனாவில், கலிபோனியாவில், கொலரடோவில், புளோரிடாவில், ஹவாயில், இடாகோவில், மொன்ரானாவில், நிவேடாவில், நியூமெக்சிக்கோவில், வடக்கு கரோலினாவில், ஒருஜியோனில், மற்றும் வோசிங்டனில் என பல இடங்களில் தீப்பிடித்து எரிந்திருக்கின்றது.

ஹவாய் தீவுகளிலுள்ள மாவேய் நகரத்தில் ஏற்பட்ட தீயில் ஏறக்குறைய 111 பேர் வரை இறந்தும் காணாமலும் போயிருக்கின்றனர். அந்த நகரத்தில் 150 ஆண்டுகளாக ஓங்கி வளர்ந்து கிளைகள் பரப்பி விருட்சமாக இருந்த ஆலமரம் இத்தீயில் எரிந்து சாம்பராகியிருக்கின்ற காட்சியை காண முடியவில்லை. வீடுகள், கார்கள், மரங்கள் என கிடைத்ததெல்லாம் தீக்குள் சங்கமமாகிவிட்ட காட்சியை காண முடியவில்லை. நகரமே சுடுகாடாகியிருக்கின்றதையும் மக்கள் தீக்குள் அகப்படாமல் கடற்கரை நோக்கி ஓடி கடலுக்குள் குதித்து தப்பியதும் தீ பரவ வழியில்லாத கற்பாறைகளுக்குள்ளும் சமதரைகளுக்குள்ளும் ஓடி தப்பித்தனர். ஆனால் பலரது வீடுகள், வதிவிடங்கள் என் அழிந்துவிட்டன.

கனடாவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயானது வேகமாக பரவியிருக்கின்றது. சேதங்கள் அதிகம் என கணிப்பிட்டிருக்கின்றரர்கள். குறித்த மாகாணத்தில் திடீரென நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் பரவியிருக்கின்றது. அதனால் அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தியும் இருக்கின்றார்கள். இதற்கும் மேலாக கனடாவின் மேற்கு கெலோனா நகரத்தில் தீயானது பரவி வருவதனால் 2400 வீடுகளில் வசிக்கும் 36,000 பேர் குடியிருந்த இடத்தை விட்டு வெளியே ற்றப்பட்டிருக்கின்றார்கள். அதிலிருந்து எல்லோ-நைப் நகரத்தை நோக்கியும் வேகமாக பரவியதாகவும் தெரிவித்திருக்கின்றார்கள்.

எமது நாட்டிலும் தீப் பரவல்கள் நடந்திருக்கின்றன. இன்னும் எதிர்பார்க்கலாம். வெப்பநிலை அதிகரிக்க இவ்வாறான நிகழ்வுகளை நாம் எதிர்பார்த்திருக்க வேண்டும். மக்களை விழிப்புணர்வூட்டி அழிவுகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ள இது சார்ந்து பல விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துதல் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 269





அப்போது நம் வீரத்தையும் தீரத்தையும் காட்ட வேண்டும். இந்த மாதிரி தந்திர மந்திர சூழ்ச்சிகளில் எதற்காக அகப்பட்டுக் கொண்டோம்?

'நமக்கு முன்னாலேயே இலங்கைக்குப் படகில் சென்றிருப்பவர்கள் யாராயிருக்கக் கூடும்! இந்தப் பெண்ணை எவ்வளவு தூரம் நம்பலாம்? இவளும் ஒருவேளை அந்தச் சதிகாரக் கூட்டத்தில் சேர்ந்தவளாயிருக்கக் கூடுமோ! இராது, இராது! இவள் கள்ளங் கபடம் அற்ற பெண். இவளை எப்படியாவது சிநேகிதம் செய்து வைத்துக் கொள்வது நல்லது.'

"பூங்குழலி! உன்னிடம் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். சற்று முன் மூலிகை கொண்டு போக நான் வந்திருப்பதாகச் சொன்னேனே, அது பொய்தான்! மிக முக்கியமான இரகசியமான காரியத்துக்காக நான் இலங்கைக்குப் போகிறேன். அதை உன்னிடம் சொல்ல விரும்புகிறேன்."

"வேண்டாம்! முக்கியமான இரகசியமான காரியங்களைப் பெண்களிடம் சொல்லக்கூடாது என்று உனக்குத் தெரியாதா? என்னிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம்."

"சாதாரணப் பெண்களைப் பற்றித்தான் அப்படிச் சொல்லுவார்கள். உன்னிடம் இரகசியத்தைக் கூறினால் அப்படி ஒன்றும் நேர்ந்துவிடாது."

"நான் சாதாரண பெண் இல்லையென்று உனக்கு எப்படித் தெரிந்தது? என்னை நீ பார்த்து ஒரு நாழிகைகூட ஆகவில்லையே."

"பூங்குழலி! உன்னை அந்தக் கோவிலில் மதிலின் மீது முதன் முதலில் பார்த்த உடனேயே எனக்குப் பிடித்துப் போய்விட்டது. உன்னை ஒன்று கேட்கிறேன். அதற்கு உண்மையாக மறுமொழி சொல்கிறாயா?"

"கேட்டுப் பார்!"

"சேந்தன் அமுதன் உன்னுடைய காதலன் அல்ல என்பது நிஜமா? அவனை நீ மணந்து கொள்ளப் போவதில்லையா?"

"எதற்காகக் கேட்கிறாய்?"

"சேந்தன் அமுதன் என் சிநேகிதன், அவனுக்கு எதிராக ஒன்றும் நான் செய்யக் கூடாது. ஆனால் அவன் உன் காதலன் இல்லையென்றால்"

"சொல்லு! ஏன் தயங்குகிறாய்!"

"அந்த ஸ்தானத்துக்கு நான் விண்ணப்பம் போடலாம் என்று பார்க்கிறேன். பூங்குழலி! காதலைப்பற்றி நீ குறைவாகப் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. உலகத்தில் காதலைக் காட்டிலும் தெய்வீகமான சக்தி வேறு ஒன்றும் கிடையாது. அப்பர், சுந்தரர், சம்பந்தர் எல்லோரும் கடவுளைக் காதலனாகக் கொண்டு பாடியிருக்கிறார்கள். தொல்காப்பியரும், வள்ளுவரும், மற்றும் தமிழ்ப் பெரும் புலவர்களும் காதலைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள். காளிதாஸன் காதலைப் பற்றிப் பாடியிருக்கிறான். பிருந்தாவனத்தில் கண்ணன் கோபியரின் காதலுக்கு வசப்பட்டான்."

"ஐயா! நான் ஒன்று சொல்கிறேன். அதை நன்றாய்க் கேட்டு மனத்தில் வாங்கிக் கொள்ளும்!" "அது என்ன?"

"எனக்கும் உம்மைக் கண்டால் பிடித்துத்தான் இருக்கிறது. இரண்டு நாளைக்கு முன் வந்தவர்களைப் பார்த்ததும் உண்டான வெறுப்பு உம்மிடம் உண்டாகவில்லை"

"ஓ! ஓ! நான் யோகசாலிதான்!" "ஆனால் காதல், கீதல் என்ற பேச்சை மட்டும் எடுக்க வேண்டாம்!" "ஏன்? ஏன்?"

"சேந்தன் அமுதன் என் காதலன் இல்லை. ஆனால் எனக்கு வேறு காதலர்கள் இருக்கிறார்கள்" "அடடா! அடடா! வேறு காதலர்களா? யார்? எத்தனை பேர்?"

"இரவு நடுநிசியில் நான் வீட்டிலிருந்து எழுந்து செல்வேன். என்னைப் பின் தொடர்ந்து வந்தால் அவர்களை உமக்குக் காட்டுவேன். நீரே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்!" இப்படிச் சொல்லிவிட்டுப் பூங்குழலி 'ஹா ஹாஹா' என்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு வந்தியத்தேவனுடைய நெஞ்சை என்னமோ செய்தது.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்

### நாம் செய்யும் காரியங்களும் பேசும்



ஒரு ஊரில் ஒரு குயவன் அவன் தாய் மனைவி, மற்றும் மகனுடன் வாழ்ந்து வந்தான். குயவனின் மனைவிக்கு அவளது மாமியாரைப் பிடிக்கவில்லை. அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பத் துணிந்தாள். குயவனை தினமும் நச்சரித்தாள். அவனது அம்மாவை பக்கத்தில் ஒரு வீட்டில் குடியமர்த்தும்படி சொன்னாள்.

வெகு நாட்கள் குயவன் அவள் சொன்னதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல் இருந்தான்.

மனைவி விடாமல் நச்சரித்தாள். அவனது அம்மாவிற்குத் தனியாக இருந்தால் ஒரு குறையும் வராது என்றும், அவரது சாப்பாட்டுத் தேவையைத் தான் கவனித்துக் கொள்வதாகவும் சொன்னாள்.

ஒரு நாள் குயவனுக்கு நச்சரிப்புத் தாங்க முடியவில்லை. அம்மாவை இருபது அடி தள்ளியிருந்த ஒரு வீட்டில் குடியமர்த்தினான். மனைவி மாமியாரிடம் குயவன் செய்த தட்டு ஒன்றைக் கொடுத்து, வேளாவேளைக்குத் தன் வீட்டுக்குத் தட்டை எடுத்து வந்தால் அதில் உணவு நிரப்பித் தருவதாகவும், அதை மாமியார் அவர் வீட்டுக்கு எடுத்துச் சென்று மகிழ்ச்சியாகச் சாப்பிடலாம் என்றும் கூறினாள்.

மாமியாருக்கு இது அவமானமாகத் தோன்றினாலும், தன் மகனுக்காக வாயைத் திறக்காமல் மருமகள் சொன்ன வழியில் வாழ்ந்து வந்தாள்.

பேரனுக்குப் பாட்டி வீட்டை விட்டுப் போனது அறவே பிடிக்கவில்லை. அவன் அம்மாவுக்குத் தெரியாமல் சில சமயம் பாட்டி வீட்டிற்குச் சென்று விளையாடுவான்.

அவன் வளர வளர குயவன் மண்பாண்டம் செய்வதைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான். சில சமயம் குயவன் வேலை செய்யாத போது அவனது இயந்திரத்தை மகன் இயக்கிப் பார்க்க ஆரம்பித்தான்.

ஒரு நாள் மகனுக்கு அப்பாவைப் போலவே மண்பாண்டம் செய்ய வந்தது. மிகச் சிறு வயதிலேயே அவன் அப்பாவின் தொழிலைக் கற்றுக் கொண்டான்.

அவன் முதல் முதலில் தன் அம்மாவுக்கு அருமையான தட்டு ஒன்றைச் செய்தான். அதை அவன் அம்மாவிடம் கொடுத்த போது அவள் மகனின் திறமையை நினைத்து பெருமைப்பட்டாள். தனக்கு அவன் முதலில் பொருள் செய்து கொடுத்ததை எண்ணி அளவில்லா மகிழ்ச்சி அடைந்தாள்.

தனது சிறிய மகனை இவ்வாறு கேட்டாள்: "மகனே! நீ செய்த தட்டு மிக அருமை. எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எத்தனையோ பாண்டங்கள் இருக்கும் போது ஏன் எனக்கு ஒரு தட்டைச் செய்து தர வேண்டும் என்று உனக்குத் தோன்றியது?"

மகன் குழந்தைத் தனமாகச் சொன்னான்: "அம்மா! ஒரு நாள் நான் அப்பாவைப் போலக் கல்யாணம் செய்து கொள்வேன். அப்போது நீ பாட்டியைப் போல பக்கத்து வீட்டுக்குப் போய் விடுவாய் அல்லவா. அப்போது உனக்கு என் மனைவி தினமும் சாப்பாடு கொடுக்க ஒரு தட்டு வேண்டுமல்லவா! அதைத்தான் உனக்கு நான் இப்போது செய்து கொடுத்தேன்"

குயவனின் மனைவிக்குத் தான் செய்த காரியத்தின் தீவிரம் புரிந்தது. மிகவும் வருந்தினாள். மாமியாரைத் தன் வீட்டுடன் வரவழைத்து மிகவும் அன்புடன் கவனித்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவில்லாத சமயவாதிகள் சமயக் கொள்கைக்காக சண்டையிடட்டும். ஆனால், தர்மவழியில் நடப்பவன் ஒருநாளும் தவறியவனாகான் — போப்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனக் கலவரத்தை ஏற்படுத்த பௌத்த பிக்குகள் பிரயத்தனம்

நாட்டில் இனக் கலவரத்தை ஏற்படுத்துகின்ற முயற்சிகளில் பௌத்த பிக்குகளில் ஒரு தரப்பினர் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இனக் கலவரத்தை ஏற்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் பொருளாதாரத்தைச் சிதைப்பது, சைவக் கோயில்களை அழிப்பது, தமிழ் மக்களின் இடங்களை – நிலங்களை ஆக்கிரமிப்பது ஆகிய நோக்கங்கள் அதற்குள் இருப்பதை உணர முடியும்.

இதன் ஒரு ஏற்பாடாகவே குருந்தூர் மலைப் பொங்கலைத் தடுப்பதற்காக புத்த பிக்குகள் சிலர் அடியாட்களுடன் குருந்தூர்மலைக்கு வந்து சேர்ந்தனர்.

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், தொல்லியல் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுடன் பொங்கல் நடைபெறும்போது, அந்நேரத்தில் புத்தபிக்குகள் தனியார் பேருந்துவண்டிகளில் அடியாட்களுடன் வந்திறங்கியதன் நோக்கம் என்ன? என்பதை நாம் சிந்தித்தாக வேண்டும்.

ஆக, நீதிமன்றத்தின் கட்டளைப்படி நடைபெறுகின்ற பொங்கலைக் குழப்பியடிக்கும் நோக்கில் புத்த பிக்குகள் சிங்களப் பேரினவாதிகளுடன் அங்கு வந்திருந்தனர்.

எனினும் பொங்கலில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்கள் எந்தவிதமான சச்சரவுகளிலும் ஈடுபடாமல், அமைதி காத்ததன் காரணமாக பௌத்த பிக்குகளின் சதித்திட்டம் நிறைவேறாமல் போயிற்று.

உண்மையில் குருந்தூர்மலையில் தமிழ் மக்கள் நிதானத்தைக் கடைப்பிடித்ததன் காரணமாக, அங்கு ஏற்படவிருந்த இன வன்மம் தடுக்கப்பட்டது.

அங்கு தங்களின் சதித்திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனதன் காரணமாக இப்போது திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநருக்கு எதிராகப் பௌத்த பிக்குகள் கோசம் எழுப்பத் தலைப்பட்டுள்ளனர்.

கூடவே திருகோணமலையிலுள்ள மாவட்டச் செயலகத்தினுள் நுழைந்த பௌத்த பிக்குகள் அங்கு அட்டகாசம் செய்துள்ளனர்.

ஆக, ஆன்மீகத்தினூடாகப் பொதுமக்களை வழிப்படுத்த வேண்டிய பௌத்த பிக்குகள் அடாவடித்தனத்தில் ஈடுபடுகின்ற கொடுமை இலங்கையில் மட்டுமே நடந்தாகிறது.

இதுவிடயத்தில் அரசாங்கமும் பொலிஸ் திணைக்களமும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் இனக் கலவரத்தை ஏற்படுத்துகின்ற பௌத்த பிக்குகளின் சதித்திட்டம் ஏதோவொரு வகையில் அரங்கேற வாய்ப்புண்டு.

எனவே இன வன்மத்தைத் தூண்டி நாட்டில் இனக் கலவரத்தை ஏற்படுத்துகின்ற நோக்கில் செயற்படும் பௌத்த பிக்குகளைக் கைது செய்து சிறையில் அடைக்காதவரை – அவர்கள் மீது தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்படாதவரை இனவாதப் பிக்குகளின் கொட்டம் அடங்கப் போவதில்லை.

எதுஎவ்வாறாயினும் தமிழ் மக்களுக்கு எதிராக இனக் கலவரத்தைக் கட்டவிழ்த்து விடும் நோக்கில் தீவிரமாகச் செயற்படுகின்ற பௌத்த பிக்குகள் தொடர்பில் சிங்கள மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

அதேபோல தமிழ் மக்களும் நிதானமாகச் செயற்படுவது மிகவும் அவசியமானது.

ஏனெனில் பேரினவாதப் பௌத்த பிக்குகளின் தற்போதைய தேவையெல்லாம் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதத் தீயை மூட்டி விடுவதுதான்.

# இலங்கையை மீளாய்வு செய்ய

## ஐ.எம்.எப் பிரதிநிதிகள் நாட்டுக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கியுள்ள 2.9 பில்லியன் டொலர் நீடித்த கடன் வசதியின் இரண்டாவது தவணையை விடுவிப்பதற்கு முன்னதாக இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரதிநிதிகள் குழு செப்டம்பர் 14 ஆம் திகதி நாட்டிற்கு வருகைதரவுள்ளது.

இந்த பிரதிநிதிகள் குழுவினர் செப்டம்பர் 27 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் வழங்குகின்ற 2.9 பில்லியன் டொலர் நீடித்த கடன் வசதி தொடர்பில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய, பல இலக்குகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

ஜூலை மாத இறுதியளவில் இந்த இலக்குகளில் 35 வீதமானவற்றை மாத்திரமே இலங்கை நிறைவேற்றியிருந்ததாக Verite Research நிறுவனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதில் மேலும் 43 வீதமான இலக்குகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய, கடன் மறுசீரமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. (ம-7,9)

# ஏற்றுமதி வருமானம் நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி வருமானம் ஆயிரத்து 27.2 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இதற்கமைய, கடந்த ஜூன் மாதத்தினை காட்டிலும் ஜூலை மாதத்தில் 2.18 ஆக அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும் கடந்த வருட ஜூன் மாதத்தை காட்டிலும், 11.79 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆடை, துணி மற்றும் இறப்பர் உள்ளிட்ட தயாரிப்புகள் மற்றும் தெங்கு மற்றும் தென்னை சார்ந்த உற்பத்தி பொருட்களுக்கான கேள்விகுறைந்தமை கடந்த வருடத்தை காட்டிலும் இந்த வருடத்தில் ஏற்பட்ட ஏற்றுமதி வருமான வீழ்ச்சிக்கு காரணமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

# இடைக்கால இழப்பீட்டை ஏற்க இலங்கை சம்மதம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட கடல்சார் பேரழிவுக்கான இடைக்கால இழப்பீட்டை ஏற்க இலங்கை ஒப்புக்கொண்டுள்ளது.

எக்ஸ்பிரஸ்பேர்ள்லைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காப்பீட்டு நிறுவனம் மற்றும் சட்ட நிறுவனத்திற்கு இந்த அறிவிப்பு அனுப்பப்பட்டதாக சட்டமா அதிபர் திணைக்களம் கூறியுள்ளது.ஷ

குறித்த கப்பலின் காப்பீட்டு நிறுவனமும் சட்ட நிறுவனமும் சமீபத்தில் சிங்கப்பூரில் நடந்த கலந்துரையாடலின்போது இடைக்கால இழப்பீடு வழங்க விருப்பம் தெரிவித் தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

# விசா முறைமையில் மீளாய்வுக்கு அமைச்சரவை அனுமதி

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் தற்போது வழங்கப்படும் விசா முறைமையை இலகுபடுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

1948ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டம் மற்றும் அதன் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைய எமது நாட்டிற்கு வருகை தருகின்ற வெளிநாட்டவருக்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தால் வருகை தரு விசா, வதிவிட விசா மற்றும் பயண விசா என 3 வகையான விசாக்கள் வழங்கப்படுகின்றன.

வருகை தரு விசா மற்றும் வதிவிட விசா ஆகிய 2 வகையான விசா முறைமையின் கீழ் வழங்கப்படுகின்ற விசா வகைகளில் காணப்படுகின்ற சிக்கலான தன்மையைக் கருத்தில் கொண்டு அதிகளவிலான வெளிநாட்டவர்களை கவர்ந்திழுக்கின்ற விசா முறைகளை கருத்திலெடுத்து எமது நாட்டில் நடைமுறையில் உள்ள விசா முறையை மீண்டும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சமகாலத்தில் நிலவுகின்ற விசா முறைகளை மிகவும் இலகுபடுத்துவதற்காக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.(ம-7,9)

# சிகிரியாவை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

சீகிரியாவை 9 உப திட்டங்களின் கீழ் சுற்றுலா பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 15 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின் கீழ் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது சம்பந்தமாக, இந்த நாட்களில் முதற்கட்ட திட்டமிடல் மற்றும் கலந்துரையாடல் முன்னெடுக்கப்படுகிறது.

சிகிரியாமற்றும்அதனை அண்டிய பகுதிகளில்இனாங் காணப்பட்டுள்ள பிரதேசங்கள், பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையற்ற சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7,9)

# மின்சார பேருந்து கொள்வனவை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி

பொதுப் போக்குவரத்திற்காக கொள்வனவு செய்யப்படுகின்ற மின்சாரப் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேல் மாகாணத்தை உள்ளடக்கிய இலங்கை போக்குவரத்து சபையினால் இந்த விடயம் நடத்தப்படுகிறது.

இந்த ஆண்டு (2023) பெப்ரவரி மாதம் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்காக 50 மின்சாரப் பேருந்துகளை அரச தனியார் கூட்டு திட்டமாக கொள்வனவு செய்வதற்காக முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அதன்படி, இந்த திட்டத் தின் கீழ் கொள்வனவு செய்யப்படும்மின்சார பேருந்துகளின் எண்ணிக்கையை 200 ஆக அதிகரிப்பதற்கு, போக் குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (ம-7,9)

# கதிர்காமத்தில் துப்பாக்கிச் சூடு

(கதிர்காமம்)

கதிர்காமத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சுமார் 05 பேர் வாள்கள் மற்றும் துப்பாக்கிகளுடன் முகத்தை மூடிக் கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.(ம-7,9)

# ரயில் மோதியதில் யுவதி மரணம்

(பாணந்துறை)

கைப்பேசியில் பேசிக் கொண்டு ரயில் பாதையில் நடந்து சென்ற யுவதி ஒருவர் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம்இரவு 7:00 மணியளவில்பாணந்துறைக்கும் பின்வத்தைக்கும் இடைப்பட்ட பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் படுகாயமடைந்த யுவதி அதே ரயிலில் ரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு நோயாளர் காவு வண்டி மூலம் பாணந்துறை ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட போதிலும் அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

சுமார் 22 வயது மதிக்கத்தக்க யுவதி இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

ரயில் பல தடவைகள் ஹார்ன் அடித்த போதும் உயிரிழந்த யுவதிக்கு கேட்கவில்லை எனவும் பொலிஸாரது முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு



19

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1996 அளவில், பெருந்தோட்டப் பயிர்கள் ஏற்றுமதியில் 20% ஐ மட்டுமே கொண்டிருந்தன. (1970 இல் இது 93%), அதே நேரம் ஆடைகள் ஏற்றுமதி 63% ஆக இருந்தது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தை அளவிட, இரண்டாம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை முதலாம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியால் வகுத்து 1 ஐக் கழிக்க வேண்டும். உதாரணமாக முதல் ஆண்டில், GDP 5,500 பில்லியன் ரூபா ஆகவும் இரண்டாம் ஆண்டில் GDP 6,800 பில்லியன் ரூபா ஆகவும் இருந்தால் ஒன்று மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் $(6800/5500) -1 = 1.2364-1 = 0.2364 =$ 23.64% ஆகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), 1990களில் சராசரியாக 5.5% ஆண்டு வளர்ச்சியைப் பெற்றது. வறட்சியும், சீர்கெட்டுவந்த பாதுகாப்பு நிலையும், 1996இல் வளர்ச்சியை 3.8% இற்குத் தாழ்த்தும் வரை இது நீடித்தது.

1997-2000 காலப்பகுதியில், சராசரி 5.3% வளர்ச்சியோடு கூடிய பொருளாதார மீட்சி காணப்பட்டதெனினும், மின்சாரப் பற்றாக்குறை, வரவுசெலவுப் பிரச்சினைகள், உலகப் பொருளாதார மந்த நிலை, மற்றும் தொடர்ந்து வந்த உள்நாட்டுக் குழப்பங்கள் என்பவற்றால், 2001இல் வரலாற்றில் முதல் முறையாக இலங்கை ஒரு பொருளாதார ஒடுக்கத்தைக் காண நேர்ந்தது.

எனினும் 2001இல், கையெழுத்து இடப்பட்ட, இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாகப் பொருளாதாரம் தேறி வருவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. கொழும்பு பங்குச் சந்தை 2003இல் ஆசியாவிலேயே ஆகக் கூடிய வளர்ச்சியைப் பெற்றதாக அறிவித்திருந்தது.

### வெளிநாட்டு பணியாளர் ஊடான வருவாய்

இதுபற்றி முன்னர் கூறியிருந்தாலும் மீண்டும் பதிவிடப்படுகிறது. தற்போது வெளிநாட்டுப் பணியாளர் ஊடான வருவாயே இலங்கை பொருளாதாரத்தின் பிரதான அங்கமாகியுள்ளது. கல்வி கற்காதோர் முதல், உயர் தரம் கற்றோர் வரை ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும் எளிதாக தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு துறையாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைந்துள்ளபடியால், பெரும்பாலானோரின் தெரிவு வெளிநாட்டு வேலை வாய்ப்பாகவே மாறி வருகின்றது.

உள்நாட்டில் தொழில் புரிவோரும் அத்தொழில்கள் ஊடாக போதிய வருவாயை ஈட்ட முடியாத நிலையும், இலங்கையில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் விலைவாசி அதிகரிப்பிற்கு முகங்கொடுக்க முடியாத நிலையும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் சமூகமாக இலங்கை சமூகம் மாற்றமாகி வருகிறது. இந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பில் பெரும்பாலானோர் வீட்டுப் பணியாளர்களாகவே தொழில் புரிகின்றனர். மத்திய கிழக்காசிய நாடுகளில் இலட்சக் கணக்கானோர் வீட்டுப் பணியாளர்களாகவே தொழில் புரிகின்றனர். மத்திய கிழக்காசிய நாடுகளைத் தவிர உலகின் பல்வேறு நாடுகளிலும் வீட்டுப் பணியாளர்களாக இலங்கையர் தொழில் புரிகின்றனர். இவ்வாறான வெளிநாட்டு வேலை வாய்ப்பின் ஊடாகவே தற்போதைய இலங்கையின் பிரதான பொருளாதாரம் ஈட்டப்படுகின்றது.

### வடகிழக்கு மக்கள்

2009ஆம் ஆண்டுக்கு முன்பு இலங்கையின் உள்நாட்டுப் போர் நடைபெற்று வந்த வடக்கு- கிழக்கு பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் மக்கள் மட்டுமே வெளிநாட்டுப் பணியாளர்களாக அதிகம் இருந்தனர். தற்போது வடகிழக்கு மக்களும் இலங்கையின் வருவாயை ஈட்ட போதுமான தொழில் வாய்ப்பு இல்லாமையாலும், இலங்கையில் செலவினங்களுக்கு முகங்கொடுக்க முடியாமையினாலும் வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்பதும் கவனிக்கத்தக்கது. அரசாங்கமும் வெளிநாடுகளுக்குச் சென்று பணி புரிவதன் ஊடாகக் கிட்டும் வருவாயை கவனத்தில் கொண்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்பையே ஊக்குவித்து பொருளாதாரத்தை ஈட்டி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இலங்கைப் பொருளாதாரத்தில் கோவிட் காலத் தாக்கம்

2021ஆம் ஆண்டு இலங்கை அபிவிருத்தி பற்றிய புதுத்தகவல் சேர்ப்பில் (Sri Lanka Development Update) இலங்கையின் பொருளாதாரமானது 2020ஆம் ஆண்டில் 3.6% வீழ்ச்சி கண்டதாக உலக வங்கி பதிவு செய்துள்ளது. கோவிட்டினால் ஏற்பட்ட பொருளாதார இறுக்கங்கள் பற்றிய புள்ளிவிபர சுருக்கத்தினை முன்வைக்கும் இன்னொரு அறிக்கையில் குறிப்பிடுவது என்னவெனில் 3.1% பொருளாதார வளர்ச்சி, குறைவான தனியார் துறைப் பங்குபற்றல் மற்றும் ஏற்றுமதிப் பொருளாதாரம் ஆகியவற்றின் பின்னணியில் பொருளாதார நெருக்கடியானது தீவிரமானதாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டது.

மேலும் இவ் அறிக்கையில் கைத்தொழில் துறையானது மொத்தமாக 6.9% பின்னடைவையும் சேவைகள் மற்றும் விவசாயத்துறைகள் முறையே 1.5% மற்றும் 2.4% பின்னடைவையும் சந்தித்தன என்றும் கைத்தொழில் துறையின் தொழில் இழப்புக்களானவை கீழ்த்தர மத்திய வர்க்கத்தில் உள்ளவர்களைக் காத்திரமான வகையில் பாதித்தன என்றும் கூறப்பட்டிருந்தது. இவர்களைத் தவிர தனியார்துறை மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் சொந்தமாக வியாபாரம் செய்யும் உரிமையாளர்களையும் மிக மோசமாகப் பாதித்தன என்றும் அத்தோடு 27% இலங்கையர்கள் மட்டுமே தொலைவிலிருந்து பணியாற்றக் கூடிய தொழில்களைக் கொண்டிருந்தனர் என்றும் நகர்ப்புறங்களிலிருந்து அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கே இந்த வாய்ப்புக்கள் காணப்பட்டன எனவும் இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது.

'இலங்கை, 2020 பொருளாதாரத்தின் நிலை' (Sri Lanka: State of the Economy 2020) என்ற அறிக்கை வெளியீட்டின் போது கொள்கைக் கற்கைக்கான நிறுவனத்தின் (Institute of Policy Studies) நிபுணர் குழுவானது பெருந்தொற்றானது எவ்வாறு ஏற்றத்தாழ்வுகளை விரிவுபடுத்தியுள்ளது என்பது பற்றி ஆராய்ந்திருந்தது. குறிப்பாக நாட்டில் அதிகரித்து வரும் கடன் மட்டம் மற்றும் மோசமடைந்த நிதி நிலைமை ஆகியவற்றின் பின்னணியில் பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்தும் திறமை இல்லாதிருப்பதன் பின்னணியிலேயே நிபுணர்குழு பெருந்தொற்று ஏற்படுத்திய ஏற்றத்தாழ்வுகள் பற்றிக் கலந்துரையாடியது.

இந்தப் பின்னணியில், மொத்தத் தொழிற்படையில் (labor force) 68% ஆக இருக்கின்ற முறைசாராத்துறையில் தொழில்புரியும் தொழிலாளர்கள் தாம் இதுவரை காலம் சேமித்த சேமிப்பை உயிர் வாழ்வதற்க்கச் செலவு செய்ததோடு கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்கு எவ்விதமாக முதலீட்டையும் செய்யாது விலகி கடுமையான பொருளாதார இறுக்கத்தினை அனுபவித்து வருவதாகக் கூறப்பட்டிருந்தது. கொள்கைக் கற்கைக்கான நிறுவனத்தினது (IPS) பிறிதொரு ஆய்வொன்றில், தற்காலிகத் தொழிலின் ஆபத்துத் தன்மை (2018ஆம் ஆண்டு காணப்பட்ட 2.8 மில்லியன் தனியார்துறை ஊழியர்களில் 60% ஆனோர் நிரந்தரமற்ற தொழிலாளர்கள் ஆவர்) குறிப்பாக தொழில் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற நன்மைகள் இல்லாமை குறித்தும் கூறியிருந்தது.

### தொழில் இழப்பு

ஒக்டோபர் 2020இல் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி, தொழில் புரிவோர் சனத்தொகையில் 2.4% சரிவு ஏற்பட்டதாகவும் தனியார்துறை வேலை வாய்ப்புப் புள்ளிவிபரங்களில் பாரிய சரிவு அல்லது வீழ்ச்சியேற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பொதுத்துறையை (Public Service) பொருத்த மட்டில் ஒரு வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டிருந்தாலும் தொழிலற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல் போன்ற அரசாங்க வேலைவாய்ப்புத் திட்டங்களால் பொதுத்துறை வேலையின்மைப் புள்ளிவிபரங்களை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடிந்தது. ஏனையவற்றைப் போல மத்திய வங்கி அறிக்கையும் பெருந்தொற்றுக் காலத்தில் முறைசாரா தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் தேவையை ஒப்புக் கொள்கிறது.

கொவிட்-19 ஆனது நாட்டின் வேலைவாய்ப்பு, வறுமை போன்றன மீது செலுத்தும் தாக்கத்தினை மதிப்பீடு செய்யும் உலக வங்கியின் 2021ஆம் ஆண்டிற்கான இலங்கை அபிவிருத்தி பற்றிய புதுத்தகவல் சேர்ப்பு என்ற அறிக்கையின்படி, பேரினத் தொழில்வாய்ப்புப்புள்ளிவிபரங்களை பாதிக்கும் மூன்று முக்கியமான காரணிகள் எடுத்தியம்பப்பட்டுள்ளன. அவை குறைவான வருமானம் பெறுபவர்கள், சமூகப் பாதுகாப்பின்றிய முறைசாரா ஊழியர்கள் மற்றும் முறைசாராத் தொழிலாளர்களின் சில பிரிவினர் (உதாரணம் ஆடைத் தொழிற்சாலைத்தொழிலாளர்கள்) போன்றோர் கொவிட் நிலைமையினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர்.) ஆகும்.

வேலைவாய்ப்பினைப் பாதுகாப்பதில் அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்பாக 57% ஆனோர் அதிருப்தி வெளியிட்டிருந்தனர். இதில் 59.8%ஆனோர் நகர்ப்புறத்தைச் சார்ந்தவர்களாகவும் 50.5% ஆனோர் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்களாகவும் காணப்பட்டனர்.

(தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

உயிரிழந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செனிவிரட்ன எனவும், அவருக்கு திருமணமாகி ஒரு வருடமே ஆகியுள்ளது.

அவர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-7,9,104)

## யாழில் மனைவி...

நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் கணவன் மற்றும் மனைவி ஆகியோர் அவர்களது தாயார் வீடுகளில் வசித்து வந்துள்ளனர்.

நேற்றைய தினம் திடீரென கணவர் அவரது சகாக்கள் சகிதம் வாள் கொண்டு சென்று வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி தனது மனைவியை அவரது விருப்பமின்றி கார் ஒன்றில் ஏற்றிச் சென்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ம-7,9,60)

## பட்டப்பகலில்...

கோவிலுக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் நேற்று முற்பகல் 11 மணியளவில் குறித்த திருட்டு இடம் பெற்றுள்ளது.

வயது முதிர்ந்த வீட்டின் உரிமையாளர் உறவினர்கள் வீட்டுக்கு சென்றிருந்த தருணத்தில் வெளிநாட்டு பணம், பெறுமதியான தங்க சங்கிலி - தோடு என்பன திருடப்பட்டுள்ளன.

வீட்டின் உரிமையாளர் குறித்த திருட்டு சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் மாலை முறைப்பாடு பதிவுசெய்ததையடுத்து யாழ்ப்பாண குற்றத்தடுப்பு பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9,33)

## சந்நிதியானுக்கு...

திருவிழாவின் இரதோற்சவம் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை விசேட பூஜைகள் இடம்பெற்று முருகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். (ம-7,9)

## மக்களின்...

மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பானது நேற்று தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது இலங்கையின் நிகழ்கால பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அரசின் பொருளாதார இலக்குகள் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் மக்கள் மேலும் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டிய அநுரகுமார திஸாநாயக்க, அரசு தேர்தலை நடத்தாது மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்துள்ளமை தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

மேலும், தேர்தலை நடத்துவதற்குக் கட்டளையைப் பிறப்பித்த நீதிபதிகள் பாராளுமன்றச் சிறப்புரிமைக் குழுவுக்கு அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டனர் எனவும், மக்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்குமுறைக்குட்படுத்தி ஜனநாயக விரோதப் போக்கை அரசு முன்னெடுக்கின்றது எனவும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இலங்கை அலுவலகத்தின் அபிவிருத்தி ஆலோசகர் மற்றும் வதிவிட ஒருங்கிணைப்பாளர் எட்வட்டும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவும் கலந்து கொண்டுள்ளனர். (ம-7,9)

## சண்டிலிப்பாயில்...

யில் வீட்டின் கதவினை உடைத்து முகமூடி அணிந்து உட்புகுந்து பிறந்து நான்கு மாதமேயான குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து வங்கி புத்தகங்கள், 3 பெறுமதியான தொலைபேசிகள், 11 பவுண் நகை, இரண்டு இலட்சம் ரூபாய் காசு என்பவற்றை கொள்ளையடித்து பின்னர் பொலிஸாருக்கு அறிவித்தால் பின்விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என தெரிவித்து வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தில் நால்வரும் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,9)

## தையிட்டி...

டுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காண்பிக்கும் வகையில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஒன்றிணையுமாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு எதிரான போராட்டத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணி தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது.

அந்த வகையில், நேற்று மற்றுமொரு கட்டப் போராட்டத்தை மாலை 4 மணியளவில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆரம்பித்துள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருடன் கனகரட்ணம் சுகாஸ் மற்றும் கட்சியின் மகளிர் பிரிவினர் உள்ளிட்டவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இனப்படுகொலை செய்த இராணுவமே வெளியேறு என சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கோஷங்களை எழுப்பியவாறு போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பௌத்த மதத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த இன்றைய போயா பொதுவிடுமுறையை மையப்படுத்தி இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொள்கை அடிப்படையில் ஜனநாயக ரீதியாகவும் சட்ட ஒழுங்குகளை மீறாத வகையிலும் போராட்ட கலாசாரத்தை முன்னெடுத்துவருவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த போராட்டமானது இன்று மாலை 7.00 மணி வரை தொடரும் என முன்னணி அறிவித்துள்ள நிலையில், விகாரை அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7,9)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மெகா பவர்
திகதி 29/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1569
J 09 03 33 55 79
67266

தன நிதானய
திகதி - 2023.08.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1251
J 03 19 24 29 J
02386

லக்கி 7
திகதி 29.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0047
L7 இலக்கம் 2 8
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 2 7 2 5 0 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3463
சீட்டிழுப்பு திகதி 29.08.2023
S 06 44 56 60
S 77168

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.08.29
சீட்டிழுப்பு இலக்கம் 530
மிதுனம் 17 33 34 54 மிதுனம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/29
சீட்டிழுப்பு இலக்கம் 5221
A 7 8 7 1 8 9

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2195 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.08.29 தினம் செவ்வாய்க்கிழமை
03 07 14 54 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,787,828.40
96080 268

சனிதா
திகதி 2023.08.29 வெற்றி வாரம் 4356 வர்ணம் பச்சை
06 07 30 70 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,796,904.00
3156 7 547

சசிரி
வெற்றி வாரம் 369
2023.08.29
06 12 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,304,440/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3907 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.08.29 தினம் செவ்வாய்க்கிழமை
14 29 30 33 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,775,556/-
29684 544

கப்றக
திகதி 29.08.2023 வெற்றி வாரம் 1371
P 31 22 26 36 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 433,827,274.20
20074 959
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2021
சீட்டிழுப்பு திகதி : 2023.08.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 50,693,048/-
18 32 46 75 W
75175 499


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் எமது புடவை கடைக்கு ஆண்/ பெண் பணியாளர் தேவை. பழகியவர்களும் பழக ஆர்வம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது. (16889)

**சிவகணேசன் புடவையகம்**
**41, பெரியகடை, யாழ்ப்பாணம்.**


## தமிழ்...

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் நேற்று கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 மைனஸ், 13 பிளஸ் எனக் கூறுபவர்களில் ஒரு தரப்பினர் இனவாதத்தையும் மதவாதத்தையும் வெளிப்படுத்தும் வகையில் செயற்படுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் வேளையில் நாட்டில் இனவெறியை, மதவெறியைத் தூண்டும் கருத்துக்கள் நாளுக்கு நாள் வந்துகொண்டிருக்கின்றன.

இது முழு நாட்டுக்கும் பேரவமானத்தை ஏற்படுத்தும். வடக்கு, கிழக்கு மக்களோ அல்லது தெற்கில் உள்ள மக்களோ மீண்டுமொரு வன்முறையை, யுத்தத்தை விரும்பவில்லை.

அரசியல்வாதிகள் தான் தங்கள் சுயலாபத்துக்காக இனவாதத்தையும், மதவாதத்தையும் கக்கி வருகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அரசு இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார். (மு-7)



மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது.


## மலிவு விற்பனை

SILVER SHIELD

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **Silver Shield Socks** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (Socks) மலிவு விலையில் (C-7155)

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள**

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியியல் கற்கை நெறிகள்**
**Banking Courses**
**DBF & HDBF (16/09/2023)**
**(IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம்)**

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
Business Level I,II (16/09/2023)

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
(AA1 - 02.09.2023) G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்
(AA2, AA3 -02/09/2023) (C-7144)

G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்

**Certificate Course in English**

**Further Details :** Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/021 222 9149
077 440 5917

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**

## வீடு வாடகைக்கு உண்டு

நாவற்குழி கேரதீவு பிரதான வீதியில் இருந்து 500 m இல் 'கோவிலாக்கண்டி' பிரதேசத்தில் 4 அறைகள் இணைந்த குளியலறையுடன் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.
**வைப்பு பணம் - 150,000/=**
**வாடகை - 5000/=** (16886)
**077 718 4901**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் (K.K.S) 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
புகையிரத நிலைய்த்தில் இருந்து 1 Km தூரத்தில்
**தொடர்புகளிற்கு** (16854)
**075 521 3533**

## காணி விற்பனைக்கு

**தாவடியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.** (16883)
**077 255 0807**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16888)

தொடர்புகளுக்கு:- குரு
**076 755 8606,**
**077 874 3204, 077 288 0152**

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16878)
**077 728 6061**

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

**மிகக் குறைந்த கட்டணத்தில்**
**UK - 400/=, Canada - 1000/=**
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
**திருமுருகன் கொம்நெற்**
**T.P : 0777 55 45 28** (16879)
**321, K.K.S. Road, Jaffna.**


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பும்



01.08.2023 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கான எமது தந்தை

### இளையவன் செல்வரத்தினம்

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் 31.08.2023 எமது இல்லத்தில் மு.ப. 11.30 மணியளவில் நடைபெறும். இதனைத்தொடர்ந்து நடைபெறுகின்ற மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

சண்டிலிப்பாய், வடக்கு
உலக்காவளை.
குடும்பத்தினர் (16887)


## கட்டட வேலைகள்

**உங்கள் வீட்டினை தரமாகவும் விரைவாகவும் கட்டித்தரப்படும்** (16881)
**074 077 1490**

## A/L Online Classes

**Biology & Chemistry**
Conducted by
**Jaffna Lecturer** (16877)
**077 807 5566**

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-7163)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
**0777-068-777**
v2vacancies@gmail.com

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7163)

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
**0777-068-777**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.182, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org